தென்றலில் தவழ்ந்து வரும்
அபர்ணாலயாவின்
புது வசந்தம்
இடம்:
கைலாசபதி
கலை அரங்கம்
காலம்: 16 - 10 - 94
ஞாயிற்றுக்கிழமை
காலை 9 மணி
மாலை 5 மணி

பக்கங்கள்: எட்டு
Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
5-00

அலை கடலில்
ஒரு ராகம்
அபர்ணாலயாவின்
புது வசந்தம்
இடம்:
கைலாசபதி
கலை அரங்கம்
காலம்: 16 - 10 - 94
ஞாயிற்றுக்கிழமை
காலை 9 மணி
மாலை 5 மணி

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 புரட்டாதி 23 ஞாயிற்றுக்கிழமை (09 — 10 — 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 319

# அரசு - புலிகள் சமாதானப் பேச்சின் போது
# அசம்பாவிதங்களைத் தவிர்க்க வற்புறுத்து

## குமார் பொன்னம்பலம் போட்டியிடாதது ஏன்?

### பி. பி. ஸிக்கு அவரே விளக்கம்

கொழும்பு, ஒக். 9

ஜனாதிபதித் தேர்தலில் தாம் போட்டியிட முன்வராததற்கான காரணத்தை இலங்கை தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திரு. குமார் பொன்னம்பலம் பி. பி. ஸி. சிங்கள சேவைக்கு அளித்த பேட்டி ஒன்றில் வெளியிட்டார்.

சமஷ்டி தீர்வு முறையை முன்வைத்து ஒரு வேட்பாளர் போட்டியிட வேண்டும் என்பதில் தமிழ் மக்கள் அவ்வளவாக ஆர்வம் காட்டவில்லை என்றும் —

எனவே ஜனாதிபதித் தேர்தலில் தாம் போட்டியிடுவதில் பயன் ஏதும் இல்லை எனக் கருதியதாகவும் — குமார் பொன்னம்பலம் தெரிவித்தார். (இ-ஐ-6)

## கொழும்பு பேராயர் வேண்டுகோள்

கொழும்பு, ஒக்ரோபர் 9

"விடுதலைப் புலிகளுக்கும் அரச பிரதிநிதிகளுக்கும் இடையிலான பூர்வாங்கப் பேச்சுக்கள் ஆரம்பமாகும் போது வடக்கிலும் தெற்கிலும் மக்கள் அமைதி பேண வேண்டும். அசம்பாவிதங்களில் குதித்து பேச்சு வார்த்தைகளைக் குழப்பி விடும் குந்தக நிலைமைகளுக்கு எந்த ஒரு சூழ்நிலையிலும் இடம் தரக்கூடாது."

கொழும்பு கத்தோலிக்கப் பேராயர் அதி. வண. நீக்கலஸ் மார்க்கஸ் பெர்னாண்டோ இவ்வாறு நாட்டு மக்களைக் கேட்டுள்ளார்.

பிரதமர் சந்திரிகாவின் சமாதான முயற்சிகளை பாராட்டி சிலாபம் மாவட்ட திருச்சபை வட்டாரம் விடுத்துள்ள ஓர் அறிக்கையிலேயே ஆயர் மார்க்கஸ் பெர்னாண்டோ முன் கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு - கிழக்குத் தீர்வு குறித்த பிரதமரின் அரசியல் ரீதியான அணுகு முறையை நாம் வரவேற்கிறோம்.

இந்த அணுகு முறைகள் வெற்றியளிக்க வேண்டும் என நாம் எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறோம்.

அதேவேளை சமரசப் பேச்சுக்களைக் குழப்பும் எந்த ஒரு விஷமத்தனமான நடவடிக்கையிலும் இறங்க வேண்டாம் என நாட்டு மக்களைக் கேட்டுக் கொள்கிறோம்.

இப்படி பேராயர் அதி. வண. நீக்கலஸ் மார்க்கஸ் பெர்னாண்டோ மேலும் குறிப்பிட்டுள்ளார். (இ-ஐ)

## யுத்த முனையில் அமைதி நிலவுகிறது

### ராணுவப் பேச்சாளர் கூறுகிறார்

கொழும்பு, ஒக். 9

யுத்த முனையில் அமைதி நிலவுவதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் கெமுனு குலதுங்கா நேற்று தெரிவித்தார்.

பாதுகாப்பு படையினர் சகல முக்கிய இராணுவ நடவடிக்கைகளையும் நிறுத்தியுள்ளனர். திருமலையில் விடுதலைப்புலிகள் இரு சிறு தாக்குதல்களை மட்டுமே நடத்தியுள்ளனர். வடபகுதியில் தாக்குதல் சம்பவங்கள் எதுவும் இடம் பெற்றதாக அறிவிக்கப்படவில்லை என இலங்கை வானொலி தெரிவித்தது.

## சந்திரிகாவினதும் காமினியினதும் பதிலை எதிர்பார்க்கிறார் தொண்டா

### கடந்த வியாழன் சென்னை பயணம்

கொழும்பு, ஒக். 9

இ. தொ. காவின் ஆறு அம்சக் கோரிக்கைகள் குறித்து ஐக்கிய தேசியக்கட்சி மற்றும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி ஆகியவற்றின் ஜனாதிபதி வேட்பாளர்களின் பதில் எப்படி அமைகின்றதோ அதனைப் பொறுத்தே எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்பது என்ற முடிவை நான் வெளியிடுவேன்.

இ.தொ.கா. தலைவர் எஸ். தொண்டமான் முன்கண்டவாறு தெரிவித்தார்.

திரு. தொண்டமான் கடந்த வியாழன் சென்னை பயணமானார்.

அதற்கு முன்பு அவர் செய்தியாளர்கள் மத்தியில் பேசுகையில், முன்கண்டவாறு தெரிவித்தார்.

"இந்த ஆறு அம்சக் கோரிக்கைகள் பற்றி நீங்கள் என்ன கருதுகிறீர்கள் என்று நான் பொ.ஐ.மு மற்றும் ஐ. தே. க. ஜனாதிபதி வேட்பாளர்களிடம் கேட்டுள்ளோம். எமது கோரிக்கைகள் குறித்து அவர்களின் மனதில் இருப்பதை நாம் அப்போதுதான் அறிந்து கொள்ள முடியும்" என்றும் தொண்டமான் தெரிவித்தார்.

(6 அம்சக் கோரிக்கை விவரம் 6 ஆம்பக்கத்தில்) (இ-எ-)

## சுபவேளையில் வந்த "எயார் பஸ்" விமானம்

கொழும்பு, ஒக். 9

பிரான்ஸிடமிருந்து இலங்கை அரசு கொள்வனவு செய்த "எயார்பஸ்" விமானம் நேற்று முன்தினம் காலை 8. 10 மணிக்கு — சுபவேளையில்— கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் வந்து தரையிறங்கியது.

"எயார்பஸ்" கொள்வனவில் ஊழல் இடம்பெற்றிருப்பதாகத் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களைத் தொடர்ந்து கொள்வனவை சந்திரிகா அரசு இடை நிறுத்தி வைத்தது தெரிந்ததே.

கொள்வனவை ரத்துச் செய்வது மூலம் பெரும் அளவு பணத்தை அரசு இழக்க வேண்டி இருந்ததால், இதன் கொள்வனவுக்கு பின்பு அங்கீகாரம் அளிக்கப்பட்டது. (இ-ஐ-6)

## தேசிய ஓய்வூதிய கொள்கை அரசு விரைவில் அறிவிக்கும்

கொழும்பு, ஒக். 9

தேசிய ஓய்வூதியக் கொள்கை ஒன்றை அரசு விரைவில் அறிவிக்கவுள்ளது.

ஓய்வூதியம் பெறுவோர் ஆலோசனைக் குழு இதற்கான யோசனைகளை சமர்ப்பிக்கும்.

பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஓய்வூதியம் வழங்குவது தொடர்பாகத் தெரிவிக்கப்பட்டிருந்த அம்சங்கள் பற்றி விவாதிக்கப்பட்டு முடிவு ஒன்று மேற் கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாதம் தோறும் 4 ஆயிரத்து 60 ரூபாவுக்கு குறைவாக ஓய்வூதியம் பெறுவோருக்கு மட்டும் தற்போது வாழ்க்கைச் செலவுப்படி வழங்கப்படுகிறது.

இதனிலும் கூடுதலான

(8 ஆம் பக்கம் பார்க்க)

## மாற்றமடையும் உலகத்துக்கு ஏற்ப மக்களின் பணியிலும் மாற்றம் தேவை

### இன்ரறக்ட் கழக மாநாட்டில் மெல்வானி

யாழ்ப்பாணம், ஒக். 9

"உலகம் மாறிக்கொண்டே இருக்கிறது. நாம் இதை ஏற்றுக்கொள்ள வேண்டும். றோட்டரிக் கழகம் போன்ற நிறுவனங்களும் இந்தமாறும் நிலைமைக் கேற்ப மக்களுக்குரிய தமது பணிகளை அமைத்துக் கொள்ளவேண்டும்.

இலங்கை றோட்டறிக் கழகத்தின் முன்னாள் ஆளுநர் றோட்டேறியன் சுரேஷ் மெல்வானி இவ்வாறு கூறினார்.

யாழ்ப்பாணம் றோட்டறிக் கழகத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட யாழ்ப்பாணப் பாடசாலைகளின் இன்ரறக்ட் கழகங்களின் மாநாட்டின் அங்குரார்ப்பண வைபவத்தில் சிறப்புரை நிகழ்த்திய போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்குரார்ப்பண வைபவம் நேற்றுப் பிற்பகல் 3 மணி முதல் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் யாழ்ப்பாண றோட்டறிக் கழகத்தின் தலைவர் றோட்டேறியன் ஈ. சரவணபவன் தலைமையில் நடைபெற்றது.

வைபவத்தில் றோட்டேறியன் சுரேஷ் மெல்வானி பிரதம விருந்தினராகவும் யாழ். பல்கலைக்கழகப் பதிவாளர் திரு. கே. பரமேஸ்வரன் மதிப்பு விருந்தினராகவும் மற்றும் கொழும்பிலிருந்து வருகை தந்திருந்த முன்னாள் தலைவர் றோட்டேறியன்

(8ஆம் பக்கம் பார்க்க)

## கப்பலில் வந்த தபால்கள் விநியோகம்

யாழ்ப்பாணம், ஒக். 9

'கோமாரி' கப்பலில் எடுத்துவரப்பட்ட 235 தபால் பொதிகளும் நேற்றுமுன்தினம் இரவே யாழ். பிரதம தபாலகத்திற்கு எடுத்துவரப்பட்டன.

இவை நேற்று முதல் தரம் பிரிக்கப்பட்டு விநியோகிக்கப்பட்டு வருகின்றன. நாளை திங்கட்கிழமையுடன் அனைத்து தபால் பொதிகளும் விநியோகித்து முடிக்கப்படும் என்று பிரதம தபாலதிபர் தெரிவித்தார். (ஒ-4)

## வீரச்சாவை தழுவிய முதல் பெண்புலி மாலதியின் நினைவுதினம் நாளை

யாழ்ப்பாணம், ஒக், 9

தமிழீழ விடுதலைப் புலிகளின் முதல் பெண் மாவீரரான 2 ஆம் லெப்டினன்ட் மாலதியின் ஏழாவது ஆண்டு நினைவுநாள் நாளை திங்கட்கிழமை தமிழீழம் எங்கும் நினைவுகூரப்படுகிறது.

இது தொடர்பாக விடுதலைப்புலிகள் மகளிர் அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது:

இந்தியாவுக்கும் எமக்குமிடையே 1987 ஆம் ஆண்டு கோப்பாய் வெளியில் சண்டை மூண்டபோது, நடந்த நேரடி மோதலில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட முதல் பெண் புலி 2 ம் லெப். மாலதியின் ஏழாம் ஆண்டு நாள் நாளை நினைவு கூரப்படவுள்ளது.

எமக்கு பாதுகாப்பு வழங்குவதாகச் சொல்லிக் கொண்டு எம் மண்ணுக்கு வந்த இந்திய இராணுவம், எம் மக்களை அழிக்க முனைந்தது: சிறிலங்கா இராணுவம் எம் மக்களை அழிப்பதைக் கைகட்டி பார்த்துக் கொண்டு இருந்தது. இறுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளை அழித்து ஒழிப்பதற்காக போரை ஆரம்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## கடைகள் மூடப்பட்டிருக்கும் பஸ் சேவைகள் குறைப்பு

யாழ்ப்பாணம், ஒக். 9

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் முதன் முதலாக வீரச்சாவடைந்த பெண்போராளி இரண்டாம் லெப்டினன்ட் மாலதியின் நினைவு நாளை ஒட்டி நாளை திங்கட்கிழமை வர்த்தக விடுமுறையாகும்.

வடமாகாண இந்திய வணிகர் கழகங்களின் இணையத்தின் கீழ உள்ள அனைத்து வர்த்தக நிலையங்களும் நாளை மூடப்பட்டிருக்கும்.

அதேசமயம் நாளை மட்டுப் படுத்தப்பட்ட அளவிலேயே பஸ்போக்குவரத்து சேவை நடைபெறும் என யாழ். மாவட்ட சிற்றூர்திச் சேவைச் சங்கங்களின் இணையத்தினர் அறிவித்துள்ளனர்.

இதற்கமைய ஒரு பாதையில் ஒரு மினிபஸ் மட்டுமே தொடர்ந்து சேவையில் ஈடுபடும்.

இம்மினிபஸ் சேவையையும் ஆஸ்பத்திரிகளுக்கு செல்லும் பயணிகளின் நேரத்தை அண்டி நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## நிர்வாக வேலை பணிமனைகள் நாளை இயங்கா

யாழ்ப்பாணம், ஒக். 9

முதலாவது பெண் மாவீரர் நாளை முன்னிட்டு நாளை திங்கட்கிழமை தமிழீழ நிர்வாக சேவையின் கீழ் உள்ள பணிமனைகள் யாவும் மூடப்பட்டிருக்கும் என்பதை தமிழீழநிர்வாக சேவை பொறுப்பாளர் அறியத்தருகின்றார். (இ)

### ஜனாதிபதி வேட்பாளர்கள்

## ஒவ்வொருவரும் ரி.வியில் 3 மணி நேரம் பேசலாம்

### கட்டணத்துடன் மேலும்45நிமிடங்கள்

கொழும்பு, ஒக். 9

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் ஒவ்வொருவருக்கும் ரூபவாஹினியிலும் வானொலியிலும் பிரசாரஞ்செய்வதற்காக 180 நிமிடங்களை வழங்குவது என்று தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டீ சில்வா தீர்மானித்துள்ளார்.

அதற்கு மேலதிகமான நேரத்தை பிரசாரத்துக்கு பயன்படுத்த விரும்பும் வேட்பாளர்கள் கட்டணஞ்செலுத்தி மேலும் 45 நிமிடங்களைப் பெறலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-எ-6)

### ஜனாதிபதி வேட்பாளர்களான

## ரணசிங்கா, ஹட்சன் சமரசிங்காவுக்கு எதிராக ஐ.தே.க ஒழுங்கு நடவடிக்கை

கொழும்பு, ஒக். 9

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சுயேச்சை வேட்பாளர்களாகப் போட்டியிடும் முன்னாள் ராஜாங்க அமைச்சர் ஏ. ஜே. ரணசிங்கா, முன்னாள் ஐ. தே. க. எம். பி. ஹட்சன் சமரசிங்கா ஆகியோருக்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சி ஒழுங்கு நடவடிக்கை எடுக்க உள்ளது.

எதிர்க்கட்சித் தலைவரும் ஐ. தே. க. ஜனாதிபதி வேட்பாளருமான காமினி திஸநாயக்கா இதனைத் தெரிவித்தார்.

இவர்கள் இருவரும் இன்னும் ஐ. தே. க. உறுப்பினர்களாகவே இருந்து வருகின்றனர். (இ-எ-6)

### முச்சந்தி முரளி




சாகரவர்த்தனா கப்பலும் ... ளோட்டம் ... ருங்கள்

## சங்குப்பிட்டி—பூநகரிப் பாதையை திறக்கும்படி ந.ச.ச.கட்சி கோருகிறது

ஆனையிறவுப் பாதையை திறக்கும் வரை சங்குப்பிட்டி —பூநகரிப் பாதையை யாழ் குடா நாட்டுக்கான போக்குவரத்துக்கு அனுமதிக்குமாறு நவ சமசமாஜக்கட்சி பிரதமர் சந்திரிகாவைக் கேட்டிருக்கிறது.

நவசமசமாஜக் கட்சியின் சார்பில் அதன் தேசியக் குழுவின் செயலாளர் திரு.வி. திருநாவுக்கரசு பிரதமருக்கு அனுப்பியுள்ள கடிதம் ஒன்றிலேயே முன் கண்ட கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.

வடபகுதிக்கான பொருளாதாரத் தடையை முற்றாக நீக்கும்படியும் ... கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது

## குவைத்எல்லைக்கு சமீபமாக ஈராக்கின் படைகள் குவிப்பு!

### ஐ.நா.பாதுகாப்புச் சபை கவலை தெரிவிப்பு

வாசிங்டன், ஒக். 9

குவைத்தை நோக்கிய ஈராக் எல்லையில் அமைந்துள்ள ஈராக் நகரான பஸ்ரா நகரில் ஈராக் புதிதாக 15 ஆயிரம் இராணுவ வீரர்களை குவித்துள்ளது. நூற்றுக்கணக்கான டாங்கிகளையும் எல்லையை நோக்கி நகர்த்தி உள்ளது.

1991 இல் நடந்த வளைகுடாப் போருக்குப் பின்னர் பஸ்ரா நகரில் ஏற்கனவே சுமார் 35 ஆயிரம் படையினரை நிலைகொள்ளச் செய்திருக்கும் ஈராக் தற்போது 15 ஆயிரம் வீரர்களை

(8ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெறும் கற்பித்தல் மட்டும் ஆசிரியப் பணியல்ல சமூக நிர்மாணக்கடமையும் அவர்களுக்குரியதே!

''படியாதவன்'' என்ற புனை பெயரில் இக் கட்டுரையை வரைந்தவர் கல்வி - நிர்வாகத்துறையில் மூத்த அதிகாரியாக இருந்து ஓய்வுபெற்ற ஒரு கல்வியாளர்.

கடந்த வியாழக்கிழமை கொண்டாடப் பட்ட அனைத்துலக ஆசிரிய நாளை ஒட்டி அவரால் இக்கட்டுரை எழுதப்பட்டது.

ஆனால் —

ஒழுக்க நெறி மிக்க சமூகத்தை உருவாக்கும் நோக்குடன் தம்மை அர்ப்பணித்து செயற்படும் பிரபல கல்லூரிகளின் ஆசிரியர்கள் சிலர் அவமதிக்கப்படும் இன்றைய சூழலில் அத்தகைய நிலை எந்தளவுக்கு சமூகத்தைப் பாதிக்கும் என்பதையும் இக்கட்டுரை கோடிட்டுக் காட்டத் தவறவில்லை. (ஆ-ர்)

பாடசாலையிலும் உயர்வான சமூக ஸ்தாபனம் வேறில்லை.

கல்விக்கு ஒப்பானதுமில்லை; உயர்வானதுமில்லை.

கல்வியின் மையப் பொருள் கற்பித்தல்.

கற்பிப்பவர் ஆசிரியர்.

கற்பித்தல் என்பது மாணவர் கற்க வேண்டுமென்ற எண்ணத்துடன் விரும்பிச் செய்யும் தொழிற்பாடு. மாணவரின் கல்விக்குப் பொறுப்பேற்கும் ஆசிரியரே அங்ஙனம் செய்பவர்.

பொறுப்பை நிறைவேற்ற அர்ப்பணம் தேவை. அர்ப்பணத்தின் அளவு மாணவரும், மற்றோரும் எந்தளவிற்கு ஆசிரியரை ஏற்கின்றனர், மெச்சுகின்றனர், கௌரவிக்கின்றனர் என்பவற்றில் தங்கியுள்ளது.

வேண்டுமென்று விஷமத்தனமாக ஒருவர் கற்பிக்க முற்படின் எவ்வித மேற்பார்வையாலும் அதனைக் கட்டுப்படுத்த முடியாது. ஏனெனில் கற்பித்தல் என்பது தனி ஒரு தொழிற்பாடு அல்ல. அது பல தொழிற்பாடுகளைக் கொண்டது. எழுதவேண்டியதைச் சொல்வதுடன் நிறுத்தலாம்; கணித வடிவில் விளக்க வேண்டியதைக் கதையுடன் முடிக்கலாம்; வரைபாகக் காட்ட வேண்டியதைக் கதையாது விடலாம்.

### இருவித பாடவிதானங்கள்

ஆசிரியர்கள் இருவித பாடவிதானங்களைக் காவித் திரிபவர்கள். போதனை மூலம் ஊட்டப்படும் கல்வியின் உள்ளடக்கத்தைக் கொண்டது ஒன்று. மற்றையது நிழல் போல் அவர்களுடன் திரியும் மறை பாடவிதானம். தனது ஆளுமை, அஞ்சாமை, அநீதிக்கு அடிபணியாமை, கூருணர்வு, கடமை, கண்ணியம், இலட்சியம், முற்போக்கு என்பவற்றைப் பின்னணியாகக் கொண்ட சாதனைகள் மூலம் மாணவர்களை ''மனிதர்'' ஆக்க ஆசிரியர் மானசியமாகக் கடைப்பிடிப்பது மறைபாடவிதானம். வல்லவரும் நல்லவருமான மாணவர்களுக்கு அடுத்தாற் போல் பாடசாலை ஒன்றின் உயர்வுக்கும் மகிமைக்கும் தூண்களாக அமைபவர்கள் தரமான மறைபாட விதானத்தைத் தாங்கித் திரியும் தகைமையும் ஈகமும் மிக்க ஆசிரியர்களே. அவர்களே மக்கள் மத்தியில் மாமனிதர்களைத் தோற்றுவிப்பவர்கள்; சமூக ஒட்டற் பண்பை, ஒத்திசைவை ஏற்படுத்தும் சிற்பிகள்.

இவ்வகை ஆசிரியர்களின் தொழிற்பாடுகள் அறியாமையினால், அனுபவக்குறைவால், ஆவடித் தனத்தால் அவமதிக்கப்படின் அறநெறிகள் அற்ற — நீதி தளம்பிய — சமூகம் தலையெடுக்க 'வழி' பிறக்கும். எதிர்கால வளர்ந்தோர் சமூகத்தை உருவாக்கப்போகும் நிகழ்கால மாணவ சமூகம் பரிகாரம் தேடமுடியாத அளவிற்குப் பாதிப்புக்குள்ளாகும்.

இத்தகைய நிலை ஏற்படாமல் நடவடிக்கை எடுக்கத் தவறும் அதிபர்களும், ஆசிரியர்களும் பாதிப்பு உறுதி பெறத் தூபமிடுபவர்களே.

### வாண்மையின் சாதனை என்ன?

இவர்கள் ஐந்நூறு மாணவர்களைப் பல்கலைக்கழகம் அனுப்புவதுதான் தங்களது வாண்மையின் சாதனை என்ற எண்ணங் கொண்டவர்கள்; பாடசாலை ஒரு சமூக ஸ்தாபனம் என்பதறியாதவர்கள், ஏனைய மாணவர்கள் எக்கேடு கெட்டாலும் எமக்கென்ன என்ற நெஞ்சம் உள்ளவர்கள். பாடசாலையில் வளர்க்கப்பட வேண்டிய, பேணப்பட வேண்டிய அறநெறிக் கோட்பாடுகள் பாடவிதானத்திற்கு அப்பாற்பட்டவை என்பது இவர்களின் கல்வித் தத்துவம். அவை சமயம் கற்பிக்கும் ஆசிரியர்களின் பூசாரிவேலை என்ற எண்ணங் கொண்டவர்களும் உளர். அவை அதிபரின் வேலையென்று நழுவுபவர்களுக்கும் பஞ்சமில்லை.

எந்தவொரு பாடங்கற்பிக்கும் ஆசிரியரும் அவ்வப் பாடத்திற்குரிய உண்மை, ஒழுங்கு, கட்டுப்பாடு ஆகிய அறநெறிக் கோட்பாடுகளை நிறைவேற்ற வேண்டுமென்பது ஒரு சத்தியப்பிரமாணம். இவை நிறைவேற்றப்படின் கல்வியில் அக்கறையில்லாத— படிப்போடாத—வேறுபுலாதியுள்ள — பங்கமான வீட்டுப் பின்னணியுள்ள மாணவர் கூட அதிபரை, ஆசிரியரை, பாடசாலையை மதிக்கும் மனோநிலையைப் பெறுவர்.

பாடசாலை ஒழுங்கு, கட்டுப்பாடு அறநெறிக்கோட்பாடு அதிபரின் கடமைகள் மட்டுமன்று; பாடசாலையில் உள்ள ஒவ்வொரு ஆசிரியரினதும் கடமைப்பாடாகும். இல்லையெனில் அவ்வித ஆசிரியர்களுக்குப் பதிலாகப் பதிவுப் பன்னி நாடா பயன் மிக்கது.

ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் பாடசாலை தமதெனக் கொள்ளும் சூழ்நிலையிலேயே அதிபரின் விரல் அசைவு அல்லது பார்வை பாடசாலையை வழி நடத்தப் போதுமானதாயிருக்கும். கைவிரல் அசைவினால் மட்டும் பாடசாலையைக் கட்டி அவிழ்த்த அதிபர்களை இன்றைய வளர்ந்தோர் பலர் தமது மாணவப் பருவத்தில் சந்தியாதிருக்க மாட்டார்கள்.

### ஆசிரியர்களுக்கும் பாதுகாவலன்

மாணவருக்கு மட்டுமன்றி ஒரு பாடசாலையின் ஆசிரியர்களுக்கும் பாதுகாவலன் பாடசாலை அதிபர். அதிபருக்கும் பாடசாலைக்கும் அரணாக இருக்கவேண்டியவர்கள் ஆசிரியர்கள்.

அதிபர், ஆசிரியர்கள், பாடசாலை ஆகியவை மாணவர்களின் அபிமானப் பொருள்கள், அந்த அபிமானத்தின் இலட்சியச் சின்னங்களே கழுத்துப்பட்டி, இலச்சினைகள், பாடசாலைக் கொடி, பாடசாலைக்கீதம் ஆகியவை. இவற்றின் அர்த்தமும் மகிமையும் உணர்ந்து அவற்றைத் தாழ்ந்த, பணிந்து, வணங்கும் மாணவர்கள் அதிபரை, ஆசிரியரை, பாடசாலையை அவமதிக்க எண்ணமாட்டார்கள்; இழிப்படிய மறுக்கமாட்டார்கள்.

முரணான முறையில் மாணவர்கள் நடப்பார்களாயின் பாடசாலையில், ஆசிரியர்கள் அணியாகத் தொழிற்படவில்லை அல்லது அந்த மாணவர்களின் வீடுகள் அறநெறி தளம்பியவை என்பவை தவிர வேறெந்த முடிவுக்கும் வர முடியாது.

### ஆசிரியர்—மாணவர் விசேட உறவு

ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்குமிடையில் ஒருவித விசேட உறவு ஏற்பட வேண்டியது அவசியம். சாதனைகள் மிக்க கற்றல்— கற்பித்தல் சூழலை ஏற்படுத்துவதே அதன் நோக்கம். ஆனால் ஆசிரியர்கள், மாணவர்களின் அன்னையாகவோ, சிற்றன்னையாகவோ, தொழிற்பட முடியாது. மாணவர்கள் தாம் பக்கத்தில் வைத்து தலையில் சுமக்கப்பட வேண்டியவர்கள் அல்ல. பராயத்தின் காரணத்தால் அவர்கள் மேல் தனித்துவமான அக்கறையும், கவனமும், பரிவும் கொள்ள வேண்டியது வளர்ந்தவர்களின் கடமைப்பாடாகும்.

இவற்றையெல்லாம் கருத்திற் கொண்டு மாணவரின் கல்விக்குப் பொறுப்பேற்று அதற்காகத் தன்னை அர்ப்பணஞ் செய்யும் ஆசிரியருக்கே, ஆசிரியரில்லா அயல்வகுப்புகளின் அட்டகாசம் குழப்பமாகவிருக்கும்; ஏனையோர்க்கு அது தாலாட்டே.

சமூகத்தின் நிகழ்கால நாணயத்தையும் எதிர்கால வாழ்வையும் நிலை நாட்டுவதற்காக சமூகம் அமைத்த நிருமாணிப்பே கல்வி. கல்வி மூலம் இளம்பராயத்தினரைச் சமூக வாழ்வினுள் பிரவேசிக்கச் செய்வது பாடசாலையின் தொழிற்பாடு. இத்தொழிற்பாட்டை நிறைவேற்றும் கர்த்தாக்கள் தகைமையும் ஈகமும் உள்ள ஆசிரியர்கள். எனவே மாணவர்கள் கண்ணின் மணிகள்; ஆசிரியர்கள் கண்களைப் படைத்த தெய்வத்திற்கு நிகரானவர்கள். ★

- படியாதவன் -

# ஆசிரியர் தம் ஆற்றலை வெளிக்காட்ட வேண்டும்

## 'மதிப்பீடு' வெளியீட்டுவிழாவில் உரை

மயிலணி, ஒக். 9

''ஒவ்வொரு ஆசிரியரும் தமது ஆற்றல்களை வெளிக்காட்டி முழுமையாகச் செயற்பட்டால் தான் ஆரோக்கிய சமுதாயத்தை உருவாக்க முடியும்''

இராமநாதன் கல்லூரியில் கடந்த மாதம் 17ஆம் திகதி தொலைக்கல்வி நிலையத்தால் நடத்தப்பட்ட போதனாசிரியர் திருச்சி நவரத்தினம் எழுதிய 'மதிப்பீடு' எனும் ஆசிரியர் கைநூலின் வெளியீட்டு விழாவில் வெளியீட்டுரை வழங்கிய திரு. சி. சிவசரவணபவான் ('சிற்பி') இவ்வாறு கூறினார்.

மதிப்பீட்டுரையை நிகழ்த்திய திருமதி கோகிலா மகேந்திரன் கூறியதாவது:

'மதிப்பீடு' நூல் முதல்தரமான நூல். ஒவ்வொரு ஆசிரியர் கையிலும் அவசியம் அது இருக்க வேண்டும்—என்றார்.

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஆசியுரை வழங்கியபோது, 'சிறப்பான சேவையின் நிமித்தமே ஆசிரியர்களைப் பதவி உயர்த்த வேண்டும், சான்றிதழ்கள் மட்டும் போதாது'' என்று கூறினார்.

திரு. ஆறு. திருமுருகன், இராமநாதன் கல்லூரி முன்னாள் அதிபர் திருமதி ம. திருச்சிற்றம்பலம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். யூனியன் கல்லூரி முன்னாள் அதிபர் திரு. நா. கந்தசாமி முதற் பிரதியையும், மனைப் பொருளியல் உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி இ. சண்முகரத்தினம் உட்பட பல அதிபர்கள் சிறப்புப் பிரதிகளையும் பெற்றனர்.

(க-89)

## புலிகளின் குரல் வானொலியில்

09 — 10 — 1994

ஞாயிறு இரவு

- ★ 8-01 — இசையரங்கம் - பாடுபவர் திரு. செல்லத்துரை
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40 — தொடர் நாடகம் - பொன் கணேசமூர்த்தி எழுதும் ''இலங்கைமண் 42 ஆம் அங்கம்''

10— 10 — 1994

திங்கள் காலை

- ★ 7-02 — மாவீரவணக்கம்
- ★ 7-15 — நீங்கள் கேட்டவை
- ★ 7-30 — செய்திகள்
- 7-35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 7-40 — நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி.

# உடற்பயிற்சியும் ஓய்வும் தியானமும் இரத்த அமுக்கத்திற்கு நல்ல மருந்து

## அதிக மாத்திரைகளால் பெரும் பாதிப்பு ஏற்படும்

யாழ்.தனியார் வைத்தியசாலைகளின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் ரி. டபிள்யு. ஜெயகுலராசா மிருசுவில் நூலக அபிவிருத்தி சபையால் நடத்தப்பட்ட மாதாந்த அறிவியல் அரங்கில் ''உயர் இரத்த அமுக்கம்'' எனும் தலைப்பில் நிகழ்த்திய உரையின் சுருக்கத் தொகுப்பை இங்கே தருகின்றோம்.

தொகுப்பு: மு. க. சிவானந்தம்.

வாய்க்காலில் நீர்பாயும் போது ஒரு தடை ஏற்பட்டால் தடைக்கு மேலே உள்ள பகுதியில் நீர் தேங்கி அமுக்கம் ஏற்படுவது போன்ற செயலே இரத்த ஓட்டத்திலும் ஏற்படுகிறது. பெரும்பாலும் எமது நடவடிக்கைகளே இரத்த அமுக்கம் ஏற்படக் காரணமாகின்றன. உணவுக் கட்டுப்பாடும், தேகப் பயிற்சியும் நோய்வராமல் காப்பதற்கும், வந்தநோயை கட்டுப்படுத்தவும் பெரிதும் உதவுகின்றன. கொழுப்பான உணவுகள், அதிலும் குறிப்பாக மாமிசக்கொழுப்பு மிக ஆபத்தானது. உப்பு அளவுக்குஅதிகமாக உப்பை சேர்த்தல், புகைத்தல், மது அருந்துதல், மனவெழுச்சி என்பனவும் இரத்த அமுக்கம் ஏற்படக் காரணமாகின்றன.

அளவுக்கு மிஞ்சிய சந்தோஷமும் அதேபோல் கவலையும் பலரின் மனவெழுச்சியை உண்டாக்குகின்றன. 90ஆம் ஆண்டில் இருந்து பெரும் மனப்பயத்துடன்தான் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இதன் தாக்கம் எல்லோரிலும் பிரதிபலிக்கிறது. அதன் விளைவாக நாம் உயர் இரத்த அமுக்கத்திற்கு உள்ளாவது தவிர்க்க முடியாதது.

பிள்ளைகளை வெளிநாட்டிற்கு அனுப்பிவிட்டு சொத்தைப் பாதுகாக்கவேண்டுமே என்ற கவலையுடனும், ஏன் இந்த வாழ்வு என்று விரக்தியுடனும் இன்று நம்மில் பலர் ஏக்கத்துடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இவர்களுக்கு உயர் இரத்த அமுக்கம் ஏற்படுவது தவிர்க்க முடியாதது.

உடற்பயிற்சியும், ஓய்வும் தியானமும் தான் இவர்களுக்கு நல்ல மருந்து. மாறாக மாத்திரைகளைப் பாவித்தால் பக்கவிளைவுகளும் தோன்றி மரணத்தை விரைவில் தழுவிக்கொள்ள நேரிடும்.

அளவுக்கு அதிகமான மாத்திரைகளை உட்கொள்வது இரத்த அமுக்கம் ஏற்படக் காரணமாகிறது. தாமாகவே மாத்திரைகளைப் பயன்படுத்துவதும், அனுபவமற்ற வைத்தியர்களின் சிபாரிசில் மாத்திரைகளைப் பயன்படுத்துவதும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும்.

சில வைத்தியர்கள் விரைவில் நோய் குணமாக வேண்டும் என்பதற்காக அதிக மாத்திரைகளையும், அவசியமற்ற மாத்திரைகளையும் கொடுத்து விடுகிறார்கள். இவை உயர் இரத்த அமுக்கம் ஏற்படக் காரணமாகி மரண ஆபத்தைக் கொண்டு வருகின்றன.

வயது வேறுபாட்டிற்கு ஏற்ப இரத்த அமுக்கம் மாறுபடும். அதனைப் பெரிதுபடுத்தக்கூடாது. இருபது வயதில் 120 / 80 என இருக்கும் இரத்த அமுக்கம் 50 வயதில் 130 / 90 ஆகவும் 70 வயதில் 140/100 ஆகவும் இருக்கும். இதனை 'அதிகம்' என எண்ணி மாத்திரைகள் போடக்கூடாது.

இரத்த அமுக்கத்தால் சிறுநீரகத்தில் கோளாறு ஏற்படுகிறது. அதனால் மேலும் இரத்த அமுக்கம் ஏற்படுகிறது. இது ஒரு தொடர் பாதிப்பாகும்.

ஆஸ்த்மா, வாதம் [illegible] நோய்களுக்கு பாவிக்கும் மாத்திரைகளும், கர்ப்பத்தடை மாத்திரைகளும் உயர் இரத்த அமுக்கம் ஏற்படக் காரணமாகின்றன. இதனால் தான் கட்டுப்பாடற்ற முறையில் மாத்திரைகளைப் பாவித்து மரண யாத்திரைக்கு நம்மைத் தயார்ப்படுத்திக் கொள்ளக்கூடாது.

நீரிழிவு நோயும் இரத்த அமுக்கமும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய நோய்கள். இரத்த அமுக்கம் கண்டவர்கள் அசட்டையாக இருந்துவிடக்கூடாது. இந்நோயுள்ள குடும்பங்கள் அதே வகையான குடும்பங்களுடன் திருமண உறவு வைத்துக் கொள்வது நல்லதல்ல. கூடியளவு தவிர்ப்பது தற்காத்துக் கொள்ளும் நடவடிக்கையாகும். காரணமில்லாத தலையிடி, வயிற்றில் நோவு, வாந்தி என்பன இந்நோய்க்கான ஆரம்ப அறிகுறிகள் ஆகும்.

மேல்நாட்டவர்களுடன் ஒப்பிடும்போது நம் நாட்டின் சாதாரண மக்களின் வைத்திய அறிவு மிகவும் குறைவானது. அதை நிறைவு செய்யும் வகையில் இப்படியான அறிவியலரங்கினை நீங்கள் [illegible]

## மன்னார் கடலில் மீன்பிடிக்க மீண்டும் தடை

கொழும்பு, ஒக். 9

மன்னார் பிரதேசத்தில் கடலில் மீன் பிடிப்பதற்கு பாதுகாப்பு படையினர் மீண்டும் தடை விதித்துள்ளனர்.

மன்னார் கடற் பரப்பில் கடந்த மாதம் இடம்பெற்ற தாக்குதல்களை அடுத்தே இத்தடை உத்தரவு மீண்டும் அமுலுக்கு வந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஓ-3)

## இலவச சீருடைக்கு ரூ. 50 கோடி

கொழும்பு, ஒக். 9

1995 ஆம் ஆண்டில் பாடசாலை மாணவர்களுக்கும் பிக்கு மாணவர்களுக்கும் இலவச சீருடைகளை வழங்குவதற்காக 50 கோடி ரூபாவை பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு ஒதுக்கியுள்ளது.

இத்தகவலை அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா வியாழன் நடந்த வாராந்த பத்திரிகையாளர் மாநாட்டில் வெளியிட்டார். (இ-ஏ-6)


## கை உழவு இயந்திரம் (லான்ட் மாஸ்ரர், குபேட்டா) விநியோகம்

வேலணை ப. நோ. கூ. சங்கத்தில் கைஉழவு இயந்திரம்(லான்ட் மாஸ்டர், குபேட்டா) பெட்டியுடன் விற்பனைக்குண்டு. தேவைப்படுவோர் 12-10-94க்கு முன்னதாக சங்க காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும். சங்க அங்கத்தவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

— பொது முகாமையாளர்.

(சி-9302)

## DIPLOMA IN NURSING
## தாதியர் பயிற்சி நெறி

10 - 11 - 1994 இல் ஆரம்பமாகின்றன.

1. கல்வித் தகைமை க.பொ.த. (சாதாரணம்)
2. காலம் 6 மாதங்கள்
3. விசேட மருந்தியல், பார்மஸி பாடங்கள் உள்ளடக்கப்பட்டன.
4. வைத்தியசாலை செய்முறைப் பயிற்சி
5. மாவீரர், போராளிகள் குடும்பதவருக்கு இலவசக் கல்வி.

சாயி மருத்துவக்கல்லூரி

இல. 10,
பருத்தித்துறை வீதி,
(அரச தாதியர் பாடசாலை முன்பாக)
யாழ். நகர்

[சி-9391]


## கலாகேசரி தம்பித்துரைக்கு மகாஜன மைந்தர்களின் பிரார்த்தனை

யா/தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியில் நீண்டநாள் சித்திர ஆசிரியராகப் பணிபுரிந்து பதவி உயர்வு பெற்றுச் சித்திரக் கல்வி அதிகாரியாக யாழ். மாவட்டத்தில் பல ஆண்டு சேவையாற்றிய தேர்ந்த

பிரபல சிற்பக் கலைஞர்

கலாகேசரி ஆ. தம்பித்துரை

அவர்களின்

### 31ஆம் நாள் நினைவு தினம்

இன்றாகும்.

அன்னார் தன் சிறப்பான சேவைகளால் மகாஜனாவின் மகிமையை ஓங்கச் செய்தவர். இக்கல்லூரியின் வரலாற்றில் அவருக்கு ஓர் சிறப்பிடமுண்டு. எனவே அவரின் நினைவு தினமான இன்றைய புனித நன்னாளில் மகாஜனாவின் மைந்தர்களாகிய நாம் அனைவரும் ஒருமித்து எம் நெஞ்சங்களில் நிலைத்துள்ள அப்பெரியாரின் ஆத்ம சாந்திக்காக அவரது குடும்பத்தவருடன் ஒன்றிணைந்து பிரார்த்திப்போமாக.

— பழைய மாணவர் சங்கம்

மகாஜனாக் கல்லூரி,
தெல்லிப்பழை.

(33252)

## 45ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி இருத்தியமும்



### கந்தர் முத்தர்

தோற்றம்: 29 — 01 — 1912
மறைவு: 26 — 08 — 1994

அன்பைச் சொரிந்து பண்பாக வளர்த்திட்டு
நேசமுடன் ஒரு வார்த்தை கூறாது
மின்னலென விண்நாடி மறைந்ததேனோ ஐயா!
கண்ணுக்குள்ளிருக்கும் கருணை வடிவம்
இன்னும் கடுகளவும் குறையவில்லை நெஞ்சினிலே
நடமாடும் வீட்டிலின்று படமாகி விட்டீர்களே!
அன்பு வார்த்தை கூறமாட்டீர்களா - ஐயா!
நெஞ்சோடு வளர்த்த பிள்ளைகளும்
பேரப்பிள்ளைகளும் மனைவியும்
கலங்கித் தவிக்கின்றனர்.

— குடும்பத்தினர்.

பாரதி வீதி,
பத்தமேனி,
அச்சுவேலி.

[33251]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். றோட்டறிக் கழக ஏற்பாட்டில் யாழ்ப்பாணப்பாடசாலைகளின் இன்ரறக்ட் கழகங்களுக்கான முதலாவது இன்ரறக்ட் மாநாடு

BE A FRIEND

(08 - 10 - 1994 — 09 - 10 - 1994)

## தொலைநோக்கு கொண்ட தலைமைத்துவம் தேவை



றோட்டரியின் உண்மைச் சக்தியை யாழ். றோட்டரியினர் றோட்டரி உலகுக்கு எடுத்துக்காட்டி உள்ளனர். யாழ்ப்பாண மக்களின் அன்பான உபசரணையால் நாம் மகிழ்ச்சியடைந்துள்ளோம்.

எதிர்காலத் தலைமைத்துவத்தை உலகுக்கு வழங்கும் பொறுப்பை இன்ரறக்ட் கழகங்கள் ஏற்றுள்ளன.

இன்ரறக்ட் உறுப்பினர்கள் ஒன்றை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். உலகில் மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. அந்த மாற்றங்களை எதிர்கொள்ளக் கூடியதாக றோட்டறி, றோட்டறக்ட் மற்றும் இன்ரறக்ட் உறுப்பினர்கள் தங்களைத் தயார்படுத்திக் கொள்ளவேண்டும். நட்புறவு, சேவை மனப்பான்மை, சர்வதேச புரிந்துணர்வு ஆகியன தான் றோட்டரி, இன்ரறக்ட் மற்றும் றோட்டறக்ட் அமைப்புகளின் உன்னத லட்சியங்களாக அமைந்துள்ளன.

முழு ஆசியாவிலுமே யாழ். இன்ரறக்ட் கழகங்கள் தான் மிகச் சிறந்தவை என்று திடமாகக் கூறுகின்றேன். நான் யாழ்ப்பாணத்தில் றோட்டரி, றோட்டறக்ட் மற்றும் இன்ரறக்ட் அமைப்புகள் திறமையாக இயங்குவதை அவதானித்துள்ளேன். இதனை நான் றோட்டறி இன்ரநேஷனலுக்குக் கூறுவேன்.

தொலைநோக்கும், திடசித்தமும் கொண்ட தலைமைத்துவம் இன்று தேவைப்படுகிறது. இதன்மூலம் அர்த்தமுள்ள மாற்றங்களை ஏற்படுத்த முடியும்.

தலைவர் என்பவர் தானே எல்லாம் செய்ய வேண்டும் என்பதல்ல; ஏனையவர்களுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்து கொடுத்து அவர்களையும் செயல்பட வைப்பது தான் தலைமைத்துவத்தின் முக்கிய அம்சமாகும்.

— றோட்டேறியன் சுரேஷ் மெல்வானி
றோட்டரி மாவட்ட முன்னாள் ஆளுநர்.

## இதயபூர்வ பாராட்டுக்கள்



ஒரு றோட்டேறியன் என்ற வகையில், யாழ்ப்பாணம் றோட்டறிக் கழகத்துக்கு நான் மேற்கொண்ட இந்த விஜயத்தை, எனது பத்து வருடகால றோட்டறி வாழ்க்கையில், சரித்திர முக்கியத்துவம் வாய்ந்ததாகவும், மிகப் பயனுடையதாகவும் கருதுகிறேன்.

நல்லெண்ணத்தைக் கட்டி எழுப்புதல், மக்கள் சேவை, சமாதானத்தை நிலைநாட்டுதல் ஆகிய றோட்டறி இலட்சியங்களோடு எமது விஜயத்தின் நோக்கமும் இசைவாகவே உள்ளது.

யாழ்ப்பாணம் றோட்டறிக் கழகத்தின் ஆதரவில் நடைபெறும் முதலாவது இன்ரறக்ட் கழக மாநாட்டில் நாம் கலந்து கொள்ளக் கிடைத்தமை பெரும் பேறாகும்.

இந்த மாநாடு மிகவும் திட்டமிடப்பட்ட முறையில் நடைபெறுவது கண்டு மகிழ்ச்சி அடைகிறேன்.

எனது இதயபூர்வமான பாராட்டுக்களை ஏற்றுக்கொள்ளவும்.

யாழ்ப்பாணத்தையும் அதனைச் சூழவும் வாழும் எங்கள் சக பிரசைகள் சீருடனும் சிறப்புடனும் வாழ்வார்களாக!

றோட்டேறியன் குஷில் பி, குணசேகரா
முன்னாள் தலைவர்,
கொழும்பு கிழக்கு றோட்டறிக் கழகம்
(மாவட்டத் தலைவர், சமூக சேவை)

## எமது விஜயம் ஒரு மைல்கல்



1984 ஆம் ஆண்டின் பின்னர் யாழ்ப்பாணத்துக்கு கொழும்பில் இருந்து றோட்டறி பிரமுகர்கள் எவரும் விஜயம் செய்யவில்லை.

இன்று கொழும்பிலிருந்து நாம் விஜயம் செய்துள்ளோம். யாழ். மக்களின் உபசரணை எம்மை வியக்கவைத்துள்ளது. இலங்கை றோட்டறியின் வரலாற்றில் எமது விஜயம் ஒரு மைல் கல்லாக அமைகின்றது. விளையாட்டுத்துறை ஊடாகவே சமாதானப் பணியை நாம் மேற்கொள்ள வேண்டும்.

யாழ். மாவட்டத்தில் மக்கள் பல ஆண்டுகளாக மின்சாரம் இன்றி கஷ்டப்படுவதாக நான் அறிந்து கவலை அடைகின்றேன்.

தென் பகுதியில் நாம் மின்னொளியில் வாழ —

நாட்டின் இன்னொரு பகுதியில் மக்கள் குப்பி லாம்பு வெளிச்சத்தில் வாழ்க்கை நடத்துகின்றார்கள் என்று அறியும் போது வேதனை ஏற்படுகின்றது. அந்த மக்களுக்கு இல்லாத மின்சாரம் நமக்கு ஏன் என்று நான் சிந்திக்கின்றேன். யாழ். மக்களுக்கு மின்வசதி கிடைக்கவில்லை என்றால், எமக்கு மட்டும் மின் வசதி ஏன் என்று சிந்திக்கின்றேன்.

நாம் நம்புவதையே நாம் செய்யவேண்டும்; நாம் செய்வதை நாம் நம்பவேண்டும்.

றோட்டேறியன் ஜானகஎதிரிசிங்க
முன்னாள் உபதலைவர்,
கொழும்பு மேற்கு றோட்டறிக் கழகம்.

## தோழமைக் கரங்களை நீட்டுவார்கள்



யாழ். மாவட்ட பாடசாலைகளில் இயங்கும் ''இன்ரறக்ட்'' கழகங்களின் முதலாவது இன்றக்ட் மாநாடு நடத்தப்படுவது குறித்து நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

இச்சந்தர்ப்பத்தில் அர்ப்பணிப்பு சிந்தனையுடன் செயற்பட்டு வரும் யாழ். றோட்டறிக் கழகத்தையும் நான் பாராட்டுகின்றேன்.

''றோட்டறி'' மாவட்டம் 3220இல் ஆகக் கூடுதலான இன்ரறக்ட் கழகங்களை யாழ். றோட்டறிக் கழகம் தான் ஆரம்பித்துள்ளது என்று நான் நம்புகின்றேன். இம்மாவட்டத்தில் 650 மாணவர்களுடன் 15 இன்ரறக்ட் கழகங்கள் செயற்படுகின்றன.

இணைந்து செயற்படுவதிலும் மாநாட்டின் நோக்கங்களில் வெற்றியும் அடைய யாழ். இன்ரறக்ட் உறுப்பினர்களை நான் வாழ்த்துகின்றேன்.

1905ஆம் ஆண்டில் திரு. போல் ஹரிஸ் கண்ட கனவான றோட்டறி உன்னத சிந்தனையாகும். இளைஞர்களின் பாதுகாவலனாகவும் தூண்டும் சக்தியாகவும் றோட்டறி என்றும் விளங்கி வந்துள்ளது. பெரும்பாலும் ஆரம்ப காலத்தில் இருந்து இன்ரறக்ட் மற்றும் றோட்டறக்ட் அமைப்புகளின் ''சேவையில் பங்குதாரர்கள்'' திட்டத்தின் கீழ் இளைஞர்களை றோட்டறி ஊக்குவித்தே வந்துள்ளது.

உலகில் வெவ்வேறு இடங்களில், வெவ்வேறு கலாசாரங்கள், மதங்கள், இனங்களைச் சேர்ந்தவர்களாக இன்ரறக்ட் உறுப்பினர்கள் உள்ளனர். ஆனால் றோட்டறியில் இவ்வேறுபாடுகள் கவனிக்கப்படுவதில்லை. இப்படித் தான் எமது திறமைகளையும் சிந்தனைகளையும் வாழ்வில் நாம் பயன்படுத்துகின்றோம். இதுவே எம்மை எல்லாம் ஒரு பெரிய உலக குடும்பமாக மாற்றியுள்ளது.

இன்ரறக்ட் உறுப்பினர்கள் என்ற அளவில் நண்பர்களாக இருப்போம். உலகில் சமாதானத்தையும் நம்பிக்கையையும் ஏற்படுத்தும் முயற்சியில் உங்கள் மத்தியில் உள்ள மூத்தோர், பெற்றோர்கள் மற்றும் பாடசாலைகளுக்கு தோழமைக் கரங்களை இன்ரறக்ட் உறுப்பினர்கள் நீட்டுதல் வேண்டும்.

றோட்டேறியன் மெல்வில் அஷ்வா,
மாவட்ட ஆளுநர், றோட்டறிக் கழகம்.

## இன்ரறக்ட் அர்ப்பணிப்புக்கு பாராட்டு



யாழ். மாவட்டத்தில் உள்ள ''இன்ரறக்ட்'' உறுப்பினர்களுக்கு இன்ரறக்ட் மாவட்ட அலுவலகத்தில் இருந்து எனது வாழ்த்துக்களை அனுப்புகின்றேன். இப்படி ஒரு மாநாட்டை நடத்துவதென்ற அற்புதமான சிந்தனை மீண்டும் உங்களுக்கு ஏற்பட்டுள்ளது.

கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையே பயணம் செய்வது ஒரு பிரச்சினையாக இருக்கும் இந்த நேரத்தில், இன்ரறக்ட் உறுப்பினர்களின் வலய மட்ட மாநாடு என்ற சிந்தனை மிகவும் வரவேற்கப்படுகின்றது.

இந்த ஆண்டு ஜூன் மாதம் கொழும்பில் உள்ள மாவட்ட அசெம்பிளியில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இன்ரறக்ட் உறுப்பினர்கள் சிலரை சந்திக்கும் பேறு எனக்கு கிடைத்தது. அவர்கள் காட்டிய உற்சாகம் இன்ரறக்ட் இலட்சியத்தில் நீங்கள் காட்டும் அர்ப்பணிப்பை கோடி காட்டுவதாக இருந்தது.

மாவட்ட ஆளுநருடன் திருகோணமலைக்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொள்வதால் இன்று என்னால் உங்கள் மத்தியில் இருக்க முடியாத நிலை ஏற்பட்டது துரதிருஷ்ட வசமானதாகும். எனினும்— அடுத்த ஆண்டின் முற்பகுதியில் யாழ்ப்பாணத்தில் உள்ள இன்ரறக்ட் உறுப்பினர்களைச் சந்திக்கும் வாய்ப்பை எதிர்பார்த்துள்ளேன்.

ஆகவே, குதூகலமாக செயற்பட்டு மாநாட்டை வெற்றியீட்ட உதவுங்கள்.

உங்கள் அன்புள்ள;
றோட்டேறியன் ஆனந்த ராஜபக்ஷ
மாவட்டத் தலைவர், இன்ரறக்ட் கழகம்.

## புதிய பார்வையுடன் செயற்படுங்கள்



யாழ். பாடசாலைகளின் ''இன்ரறக்ட்'' கழக மாநாட்டுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

இந்த மாநாட்டில் பங்கு பற்றும் இன்ரறக்ட் உறுப்பினர்களின் இணைந்த செயற்பாட்டு உணர்வை நான் பாராட்டுகின்றேன்.

இம்மாநாடு, இன்ரறக்ட் உறுப்பினர்கள் ஒன்று கூடி பல விஷயங்கள் குறித்து அபிப்பிராயங்களை பரிமாறிக் கொள்ளவும், தங்களிடையே சிநேக மனப்பான்மை உணர்வை வளர்க்கவும் சந்தர்ப்பத்தை வழங்கியுள்ளது.

சமூக சேவை, சர்வதேச புரிந்துணர்வு, தலைமைத்துவம், ஆளுமை வளர்ச்சி, அன்பு மற்றும் சிநேகித மனப்பான்மை ஆகிய உயரிய சிந்தனைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இன்ரறக்ட் கழகத்தின் இலட்சியமாகும்.

எமது பெருமைமிக்க மண்ணில் மகிழ்ச்சி, நம்பிக்கை ஆகியவற்றை உறுதிப்படுத்த அர்ப்பணிப்பு சிந்தனை, வீரம் மற்றும் புதிய பார்வையுடன் நாம் செயற்பட வேண்டும்.

மக்கள் மத்தியில் புரிந்துணர்வு என்ற நல்லெண்ணப் பாலத்தைக் கட்டி எழுப்புவதே இன்ரறக்ட் கழகத்தின் பொது நோக்காக அமைந்துள்ளது.

இப்பொது நோக்கத்தின் அடிப்படையில் தமது சமூகத்தின் மத்தியில் சமூக, பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களைச் செயற்படுத்த இன்ரறக்ட் கழகங்கள் முனைப்புடன் செயற்பட வேண்டும்.

நாளைய தலைவர்களாக விளங்கப் போகும் இன்றைய இளைஞர்களுக்கு தலைமைத்துவ பண்புகளை வளர்ப்பதற்கும், தலைமைத்துவ பயிற்சியை வழங்குவதற்கும் இன்ரறக்ட் கழகம் ஒரு களமாக அமைந்துள்ளது.

இந்த அடிப்படையில் யாழ். மாவட்டத்தின் முதலாவது இன்ரறக்ட் மாநாடு, தலைமைத்துவத்தை நோக்கிய பாதையில் இணைந்த செயற்பாட்டுணர்வை உறுதிப்படுத்த வேண்டும். எனது உளப்பூர்வமான இந்த எதிர்பார்ப்புடன் இம்மாநாடு வெற்றிபெற வாழ்த்துகின்றேன்.

றோட்டேறியன் ஈ. சரவணபவன்,
தலைவர், யாழ். றோட்டறிக் கழகம்.

## பெரு மாநாடாக நடக்கும் கருத்தரங்கு



ஐம்பத்து நான்கு ஆண்டுகளாக யாழ்ப்பாணத்தில் இயங்கி வருகின்ற எமது றோட்டறிக் கழகத்தின் சேவை பலரும் அறிந்ததே. எமது கழகத்தைப் பொறுத்த அளவில் முன்னைய ஆண்டுகளிலும் பல இன்ரறக்ட் கழக தலைமைத்துவப் பயிற்சிக் கருத்தரங்குகள் நடைபெற்றுள்ளன. ஆனால் இவ்வாண்டுதான் முதன் முதலில் இக்கருத்தரங்கு ஒரு பெரு மாநாடாக நடாத்தப்படுகின்றது.

இம் மாநாட்டின் மூலம் எமது இளம் தலைமுறையினரின் தலைமைத்துவப் பண்பும் ஆளுமையும் வளர்ச்சியுற்று விடியப்போகும் எம் மண்ணுக்கு பெரும் பயன் விளைக்கும் என்று பெரிதும் நம்பவாம்.

இம்மகாநாடு சிறப்புற முழுமையான ஒத்துழைப்பு நல்கிய றோட்றக்ட், இன்ரறக்ட் கழக அங்கத்தவர்களுக்கும் இவ்வேளை நன்றி கூறுகின்றேன்.

தொடர்ந்தும் எமது முயற்சிகள் சிறப்புற அனைவரிடமும் ஒத்துழைப்பை வேண்டி நிற்கின்றேன்.

டாக்டர். கு. ஸ்ரீ இரத்தினகுமார்
[illegible] சேவை,
யாழ். றோட்டறிக் கழகம்

300, கோ[illegible]
யாழ்ப்பாணம்.



றோட்டறியின் தந்தை
போல் பி. ஹரிஸ்

''சகிப்புத் தன்மையும், நட்பும் உலகளாவிய ரீதியில் கைக்கொள்ளப் பட்டால், எல்லோராலும் மிக ஆவலுடன் விரும்பப்படும் அனைத்துலக அமைதி மலரும் என்பதில் றோட்டேறியன்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர்.''

## யாழ்ப்பாண மாவட்டத்தில் இன்ரறக்ட் கழகங்கள் இயங்கும் பாடசாலைகள்

- யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரி
- சுண்டிக்குளி மகளிர் கல்லூரி
- புனித பத்திரிசியார் கல்லூரி
- வேம்படி மகளிர் கல்லூரி
- கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்
- கொக்குவில் இந்துக்கல்லூரி
- யாழ்ப்பாணம் திருக்குடும்ப கன்னியர் மடம்
- தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி
- யாழ். இந்து மகளிர் கல்லூரி
- யாழ். மத்திய கல்லூரி
- உடுவில் மகளிர் கல்லூரி
- யாழ். இந்துக்கல்லூரி
- மானிப்பாய் இந்துக்கல்லூரி
- மானிப்பாய் மெமோரியல் கல்லூரி
- உருப்பிராய் இந்துக்கல்லூரி
- பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி
- வடமராட்சி இந்துக்கல்லூரி

## இன்ரறக்ட் என்பது என்ன?

''இன்ரறக்ட்'' என்பது என்ன?

14–18 வயதுக்குட்பட்ட மாணவர்களுக்காக பாடசாலைகளில் ''றோட்டறி'' கழகத்தின் ஆதரவுடன் இன்ரறக்ட் கழகங்கள் இயங்குகின்றன.

உலகில் உள்ள மிகப்பெரிய இளைஞர் இயக்கமாக இன்ரறக்ட் செயல்படுகிறது. அமெரிக்காவில் 1962ஆம் ஆண்டில் இன்ரறக்ட் ஆரம்பமானது. சக்தி வாய்ந்த இளைஞர் இயக்கமாக நூறுக்கும் அதிகமான நாடுகள் இன்ரறக்ட் கழகத்தை ஏற்றுள்ளன. உலகில் 7ஆயிரத்து 500பாடசாலைகளில் ஒருலட்சத்து 75ஆயிரம் இன்ரறக்ட் உறுப்பினர்கள் உள்ளனர்.

**இன்ரறக்ட் என்பதன் நோக்கம் யாது?**

சேவை மற்றும் சர்வதேச புரிந்துணர்வுக்குத் தங்களை அர்ப்பணிப்பதன் மூலம் உலக சகோதரத்துவத்துக்காக இணைந்து செயல்படும் வாய்ப்பை இளைஞர் சமுதாயத்துக்கு இன்ரறக்ட் அமைப்பு வழங்குகின்றது.

**இன்ரறக்ட்டில் யார் உள்ளனர்?**

பல்கலைக்கழக மட்டத்துக்கு முன்பதாக பாடசாலைகளில் நான்கு வருடங்கள் கல்வி பயிலும் மாணவ, மாணவிகள் எவரும் இன்ரறக்ட் உறுப்பினராகலாம். பாடசாலையை அல்லது சமூகத்தை மையமாக வைத்து இன்ரறக்ட் கழகங்கள் அமையலாம்.

**இன்ரறக்ட் கழகம் ஆற்றும் பணி யாது?**

இன்ரறக்ட் கழகத்தின் பணிகள் மற்றும் திட்டங்கள், கழகத்தின் உறுப்பினர்களினாலேயே ஆரம்பிக்கப்பட்டு நிறைவேற்றப்படுகின்றன. தெரிவு செய்யப்பட்ட தங்களின் நிர்வாகிகள் மூலம் ஒவ்வொரு இன்ரறக்ட் கழகமும் தமது சொந்த நிகழ்ச்சி நிரல்களையும் திட்டங்களையும்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## ஆதரவு நல்கியோர்

- றோட்டேறியன் எஸ். மகேந்திரன்
- றோட்டேறியன் எஸ். தெய்வேந்திரன்
- றோட்டேறியன் கே. கேதீஸ்வரன்
- றோட்டேறியன் எஸ். சத்தியமூர்த்தி
- திரு. என். ஸ்ரீ தரன்
- மில்லர்ஸ் லிமிட்டெட்
- உதயன் நிறுவனம்
- யாழ். மாவட்ட அமெச்சூர் மெய்வல்லுநர் சங்கம்
- இலங்கை வங்கி, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
- மக்கள் வங்கி, பிராந்திய தலைமையகம், யாழ்ப்பாணம்
- ஹற்றன் நஷனல் வங்கி, யாழ்ப்பாணம்
- ஸ்ரீலங்கா செஞ்சிலுவைச் சங்கம் — யாழ். கிளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

3 அங். 4 அங். எஸ்லோன் பைப்புகள், எனாமல் பெயின்ற் ரின்கள், பிளாஸ்ரிக் பாத்திரங்கள், அலுமினியம் ஆப்ப தாச்சிகள், பொலித்தீன்தாள், சொப்பிங் பாக் சகல அளவுகளிலும் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. நாதன் களஞ்சியம், இல. 213C, கிட்டுசாலை, மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணம். (33180)

புறொயிலர் இறைச்சிக் கோழிகள், சேவல்கோழிகள் விற்பனைக்குண்டு. இல. 7, நிக்கலஸ் ஒழுங்கை, கச்சேரி நல்லூர் வீதி, சுண்டிக்குளி. (33195)

ஹொண்டா லீட் 80 C.C. (Honda Lead) பெண்கள் பாவனைக்குரியது. இத்துடன் ஆண், பெண் இரு பொமனேரியன் நாய்க்குட்டிகளும் விற்பனைக்குண்டு. 30, சுவாட்ஸ் லேன், சுண்டிக்குளி. (ஆசீர்வாதம் அச்சகம் முன்பாக) (7951)

அடைவைக்க உகந்த சில்கி, போலிஸ், பாபடிகல்ஸ், பிராமா, சில்வ சிப்பிறைட், களுத்தான் முட்டைகள் விற்பனைக்குண்டு. விடுமுறை நாட்களில் முழுநேரமும் ஏனைய நாட்களில் காலை 8–30 முன் பெற்றுக்கொள்ளலாம். இல. 11, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர். (33250)

உரும்பிராய் தெற்கில் கோண்டாவில் இ. போ. ச. டிப்போவுக்கு அண்மியதாகக் களஞ்சிய வசதிகொண்ட கட்டடத்துடன் கூடிய 2½ பரப்புக்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: திருமதி லிங்கா துரைராசா சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசும், 19, பண்டாரக்குளம் ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம். (சி–9283)

### கோழிக்குஞ்சு விற்பனை

Prima Broiler குஞ்சுகள் இரண்டு கிழமை நிரம்பிய Prima Hyline Brown சிவப்பு பேட்டுக் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (33238)

ஒவ்வொரு செவ்வாயும் புதனும் நல்லின பிறிமா புறொயிலர் குஞ்சுகள் தனிச் சிவப்பு குஞ்சுகளும் விநியோகிக்கப்படும். 4 நாட்கள் வளர்ச்சியடைந்த புறொயிலர் குஞ்சு 42 ரூபா, பிளிமத் கறுப்பு வரிக் குஞ்சுகள் 30 ரூபா, தனிச்சிவப்பு குஞ்சுகள் 35 ரூபா. உடுவில் மகளிர் கல்லூரிக்கு முன், மல்வம் வீதி ஊடாக, சிங்கம் வீதி, உடுவில். (7666)

### இறைச்சிக்கோழிகள்

இறைச்சிக்கோழிகள் விற்பனைக்குண்டு. கோழித்தீன் வகைகளும், கோழி மருந்து வகைகளும் பெற்றுக்கொள்ளலாம். ஆனந்தா களஞ்சியம், ஆடியபாதம் வீதி, கல்வியங்காடு. (33196)

### புறொயிலர் விற்பனை

புறொயிலர் இறைச்சிக் கோழிகள், சேவல் கோழிகள், விறாத்து கோழிக்குஞ்சுகள், இறைச்சிக்கோழிகள் உடன் விற்பனைக்குண்டு. சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம். ''மல்லிகாபதி'', சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (33188)

### ஆங்கில வழிகாட்டி

யாழ். நகரிலுள்ள முன்னணிப் புத்தக நிலையங்களில் பெறலாம். G. C. E. O/L English Literature Notes on ''Poetry'' and 'Oliver Twist' by T. N. Punjaksharam விலை ரூபா 65/- Science Hall கன்னாதிட்டியிலும் கிடைக்கப் பெறும். (சி–9387)

### வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை சிவன் கோயில் வடக்குவீதியில் உள்ள 86A இலக்க வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: திருமதி க. இராஜநாகேஸ்வரி ''யோகஸ்தி'', மானிப்பாய் தெற்கு, மானிப்பாய். (7950)

### மணமகன் தேவை

இந்து, 5-11-70 உத்திராடம் 1ஆம் பாதம், கன்னிராசி உதயர் செவ்வாய் உள்ள அழகிய பெண்ணுக்கு ஆசிரியர், அரச உத்தியோகம் உள்ள மணமகன் தேவை. உடன் சமீபத்தில் எடுத்த புகைப்படம், ஜாதகத்துடன் தொடர்பு: ''அபிராமி'', துர்க்காதேவி தேவஸ்தான பின் வீதி, சாவகச்சேரி. (33244)

இந்து, 18-12-58, புரட்டாதி 4ஆம் பாதம், 6இல் செவ்வாயுள்ள B. A. டிப்ளோமா அழகான ஆசிரியைக்கு அரச உத்தியோகம், வங்கி, ஆசிரியர் மணமகன் தேவை. சமீபத்தில் எடுத்த புகைப்படம், ஜாதகத்துடன் தொடர்பு: ''அபிராமி'', துர்க்காதேவி தேவஸ்தானம் பின் வீதி, சாவகச்சேரி. (33245)

இந்து, 25-9-60, விசாகம் 2ஆம் பாதம், 1இல் செவ்வாயுள்ள B.Sc. அழகான ஆசிரியைக்கு ஆசிரியர், அரச உத்தியோகம், வங்கி மணமகன் தேவை. தாரம் இழந்தவரும் விண்ணப்பிக்கலாம். ஜாதகம், சமீபத்தில் எடுத்த புகைப்படத்துடன் தொடர்பு: ''அபிராமி'', துர்க்காதேவி தேவஸ்தான பின் வீதி, சாவகச்சேரி. (33247)

இந்து, 14-06-62 சுவாதி 3ஆம் பாதம், 8இல் செவ்வாயுள்ள மனையியல் றெயினிங் ஆசிரியைக்கு வங்கி அல்லது ஆசிரியர் அரச உத்தியோகம் உள்ள மணமகன் தேவை. சமீபத்தில் எடுத்த புகைப்படம், ஜாதகத்துடன் தொடர்பு: ''அபிராமி'' திருமண சேவை, துர்க்காதேவி தேவஸ்தான பின் வீதி, சாவகச்சேரி. (33249)

இந்து, 15-01-62, பரணி 3ஆம் பாதம், 2இல் செவ்வாயுள்ள B. Sc. ஆசிரியைக்கு அரச உத்தியோகம், ஆசிரியர், வங்கி மணமகன் தேவை. ஜாதகம் புகைப்படம் உட்பட உடன் தொடர்பு: ''அபிராமி'', துர்க்காதேவி தேவஸ்தான பின் வீதி, சாவகச்சேரி. (33248)

இந்து 29 - 07 - 62, திருவாதிரை 2ஆம் பாதம், 11இல் செவ்வாயுள்ள அழகிய விஞ்ஞான பட்டதாரி ஆசிரியைக்கு தனியார், வங்கி ஆசிரியர் அரச உத்தியோகம் உள்ள மணமகன் தேவை. ஜாதகம் புகைப்படத்துடன் உடன் தொடர்பு: ''அபிராமி'', துர்க்காதேவி தேவஸ்தான பின் வீதி, சாவகச்சேரி. (33246)

### தேவை

வயோதிபத் தம்பதிகளுக்கு சமைக்கவும், வீட்டைப் பராமரிக்கவும் வீட்டோடு இருக்கத் தகுந்த பெண் உதவியாள் உடன் வரவும். சம்பளம் பேசித் கொள்ளலாம். இல. 25, மாட்டின் வீதி, யாழ்ப்பாணம். (33221)

### ஜோதிட விஞ்ஞானம்

09-11-94 அரசுத்தலைவி (மகரராசி) சந்திரிகா ஜனாபதித் தேர்தலில் அமோக வெற்றியும், 11-11-94 குருச் சண்டாளத்திய யோகம் முற்றாக நீக்கமும் நாட்டில் அமைதியையும் சமாதானத்தையும் ஏற்படுத்தி யுத்த நிறுத்தத்தை பூரணமாக அமுல்படுத்தும். (சத்யா–கட்டுடை) (7667)

### இசை வகுப்புக்கள்

14-10-94 விஜயதசமி அன்று காலை 9 மணிக்கு கிற்றார், ஓகன், மிருதங்கம், தபேலா வகுப்புகள் ஆரம்பம். அபர்ணாலயா இசைக் கல்லூரி, கலாசாலை வீதி, திருநெல்வேலி வடக்கு. (சி–9266)

## திக்குச்சி விளையாட்டால் குழந்தை காயம்

யாழ்ப்பாணம், ஒக். 9

வெற்றுத்தோட்டாவுக்குள் திக்குச்சி மருந்தை அடைந்த சிறுவன் அதனை நெருப்பில் சூடுகாட்டிய போது அது வெடித்தது. இதனால் அருகில் இருந்த மூன்று வயதுக் குழந்தை படுகாயமடைந்தது.

சாவகச்சேரி கச்சாய வீதியில் வியாழன் மாலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் அவ்விடத்தைச் சேர்ந்த எம். சரண்யா (வயது 3) என்ற பெண் குழந்தையே காயமடைந்த குழந்தையாகும்.

இக்குழந்தை யாழ். ஆஸ்பத்திரியில் அதிதீவிர சிகிச்சைப்பிரிவில சிகிச்சைக்குட்படுத்தப்பட்டுள்ளது.

## பாடசாலைகளில்

சாவகச்சேரி கற்குழி பாரதி பாலர் பாடசாலை விளையாட்டுப் போட்டி இன்று ஞாயிறு பிற்பகல் 2 மணி முதல் பாரதி சனசமூக நிலையத் தலைவர் சி. ஸ்ரீகாந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

முதன்மை விருந்தினராக சாவகச்சேரி நகரசபை செயலாளர் திரு. சி. நடராசாவும், சிறப்பு விருந்தினராக நகரசபையின் முன்னாள் செயலாளர் திரு த. நவரத்தினராசாவும் கலந்து கொள்வர்.

## விதைநெல்

பச்சிலைப்பள்ளிப் பகுதியில் காலபோக நெற்செய்கைக்கான விதை நெல் பளை கமநலச் சேவை நிலையம், பொருண்மிய மேம்பாட்டு நிறுவன பளைப் பிரிவு அலுவலகம் ஆகியவற்றில் வழங்கப்பட்டுவருகிறது. (ஒ–117)

## ஓராண்டு நினைவஞ்சலி



அமரர் சின்னத்தம்பி கந்தையா

தோற்றம்: 1934 — 05 — 03

மறைவு: 1993 — 10 — 19

திதி: 09 — 10 — 1994

நெஞ்சோடு கண்ணும் நீரோடி நிற்கிறது
உறுதியுடன வேராக என்றும் நீ இருப்பாய் என்றிருக்க
அஞ்சாது நோயொன்றால் அந்தகனும் உன் மூச்சை
கெஞ்சியழப் பிரித்தானே கதியற்று நிற்கின்றோம்.
நீங்காத நினைவுடன் நின் நிறைவான சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

— குடும்பத்தினர்.

சுதுமலை தெற்கு,
எச்சாட்டி வீதி,
மானிப்பாய்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மண்ணுலகம்: 10 — 02 — 1930

விண்ணுலகம்: 09 — 09 — 1994

அமர வாழ்வெய்திய
**திருமதி கார்த்திகேசு செல்லம்மா**
(திருநெல்வேலி)

அன்பின் திருவுருவாய், பண்பின் பிறப்பிடமாய், பாசத்தின் சிகரமாய் வாழ்ந்து எங்கள் அனைவருக்கும் நல்வழி காட்டிய அன்புத் தெய்வமே! நீங்கள் எம்மை விட்டு, திடீரெனப் பிரிந்து விட்டாலும், எங்கள் உணர்வு உள்ளவரை உங்கள் நினைவும், அன்பும் என்றும் எங்களைவிட்டு அகலா.

எமது அன்பு மனைவியின் ஈமக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், உறவினர், நண்பர்களுக்கும், அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள் அளபபில.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கும்;

கணவர்: வ. கார்த்திகேசு,

பிள்ளைகள்: ரோகினி (மலேசியா), கே. ரவீந்திரன் (ஜேர்மனி), நந்தினி (சுவிஸ்), சுபாசினி (சுவிஸ்),

மருமக்கள்: மூர்த்தி (மலேசியா), ஆர். ரவீந்திரன் (சுவிஸ்), கேதீஸ்வரன் (சுவிஸ்), ரஜனி (ஜேர்மனி), பேரப்பிள்ளைகள், சகோதரர்கள், மைத்துனர்கள் மற்றும் உற்றார், உறவினர்கள்.

தகவல்:
சு. மனோகரன் (பேறாமகன்)
கலாசாலை வீதி, திருநெல்வேலி.

(33207)

## 10-ம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் செல்லையா சொக்கநாதன்
(இளைப்பாறிய P. W. D. Overseer)

தோற்றம்: 08-07-1910 மறைவு: 29-09-1984

திதி: 09 - 10 - 1994

''தனக்காக வாழாமல் பிறர்க்காக வாழ வேண்டும் அதுவே எம்மையும் வாழவைக்கும்''

என்று போதித்தீர்கள், அவ்வாறே வாழ்ந்தீர்கள். உங்கள் போதனையின் பயனை எமது வாழ்வில் நிதர்சனமாகக் காண்கிறோம். நீங்கள் காட்டிய வழியில், உங்கள் நினைவுகளுடன், எம் வாழ்வை தொடர்வோம்.

நீங்கா நினைவுகளுடன் நினைவு கூரும்:
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(33224)

உ
தேவி துணை
ஓம் விஸ்வப் பிரம்மனே நமஹ:

## அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம் திருநெல்வேலி

# கேதார கௌரி விரத லஷார்சனை

14-10-94 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தொடக்கம் 02 - 11 - 94 ஆம் திகதி புதன்கிழமை வரைக்கும் தினமும் மாலை 5 மணிக்கு மூலஸ்தான பூசையும், தொடர்ந்து அர்ச்சனை ஹோமம் என்பனவும் நடைபெறும். 03-11-1994 ஆம் திகதி பூர்த்தி நாளன்று பி.ப. 2மணிக்கு அபிஷேகமும் லஷார்சனை பூர்த்தியும் அம்பாள் வெளிவீதி வலம் வருதலும் நடைபெற்று, 5 மணிக்கு திருக்காப்பு வழங்குதலும் நடைபெறும்.

குறிப்பு:

பங்கு பற்றுவோர் வரும் பொழுது ஒரு சிவலிங்க அர்ச்சனைப் பொருள்கள், பூ வகை, செம்பு, விளக்கு என்பன கொண்டு வரவும்.

கிரியைகளை தேவஸ்தான பிரதமகுரு **சிவஸ்ரீ க. மகாகணபதீஸ்வரக் குருக்கள்** தலைமையில் பிரபல சிவாச்சாரியார்கள் கலந்து நடத்துவார்கள். பெட்டிக் காப்பு, தனிக்காப்பு, காப்புக்கட்ட விரும்புவோர் முன் கூட்டியே ஆலய காரியாலயத்தில் தொடர்பு கொள்ளவும்.

இங்ஙனம்;
ஆலயபரிபாலன சபை
ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம்,
திருநெல்வேலி. (33233)

## வெளிவந்துவிட்டது!

### யாழ்ப்பாணம் தொன்மை வரலாறு (1993)

பக். 764 — விலை ரூபா 800/-

வெளியீடு: யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி

ஆக்கியோன்: கலாநிதி சி. க. சிற்றம்பலம், தலைவர் / வரலாற்றுத்துறை.

★★★ இந்நூல் யாழ்ப்பாண இராச்சியத்திற்கு முற்பட்ட வடபகுதி வரலாற்றை மையமாகக் கொண்டது.

### இந்நூலாசிரியரின் பிற நூல்கள்

யாழ்ப்பாண இராச்சியம் (பதிப்பு) (1992) — பக் 416 — விலை ரூபா 450/-

பண்டைய தமிழகம் (1991) — பக். 340 — விலை ரூபா 375/-

பல்கலைக்கழக ஆசிரியர், மாணவர் ஆகியோர் 25 வீத கழிவு விலையில் இவற்றைப் பெற்றுக் கொள்ளலாம்.

கிடைக்குமிடம்

| யாழ்ப்பாணம் | கொழும்பு |
| --- | --- |
| காசாளர் (நிதிக்கிளை) யாழ்ப்பாணப் - பல்கலைக்கழகம், திருநெல்வேலி. | Jaffna Co - Operative Stores, 154, Wolfendhel Street, Colombo – 13 |

[சி-9297]

## நன்றி நவிலலும் சபிண்டீகரண அழைப்பும்



தோற்றம்: 06 — 09 — 1976

மறைவு: 10 — 09 — 1994

**செல்வி ஆயித்தர் தாரிணி**

06 – 09 – 1994இல் எம்மைப் பிரிந்து இறைபதமடைந்த எமதருமை மகள் தாரிணியின் இறுதிச் சடங்குகளில் கலந்தும், அனுதாபச் செய்திகள் அனுப்பியும், பல்வகை உதவிகளைச் செய்தும் எமக்குத் துணை நின்ற அன்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

அத்துடன் நாளை (10 – 10 – 1994) திங்கட்கிழமை நடைபெறவிருக்கும் அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகளிலும், அதையடுத்து எமது இல்லத்தில் இடம்பெறவிருக்கும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

திரு. திருமதி வே. ஆயித்தர்.

தாமரைக்குளத்தடி,
துன்னாலை கிழக்கு,
கரவெட்டி.

(சி–9390)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தானிலும் பங்களாதேஷிலும் நடக்கும் கிளர்ச்சிகள்

# நாடாளுமன்ற ஜனநாயகத்துக்குப் பெரும் அச்சுறுத்தல்!

பாகிஸ்தானிலும் பங்களாதேஷிலும் ஆட்சியில் உள்ள அரசாங்கங்களுக்கு எதிராக கிளர்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

பாகிஸ்தானில் பாகிஸ்தான் மக்கள் கட்சி ஆட்சியில் இருந்து வருகிறது. அதன் தலைவி பெனாஸிர் பூட்டோ பிரதமராக இருந்து வருகிறார்.

பங்களாதேஷில் பங்களாதேஷ் தேசியவாதக் கட்சி ஆட்சியில் இருந்து வருகிறது. அக்கட்சியின் தலைவி பேகம் காலெடா ஸியா பிரதமராக இருந்து வருகிறார்.

பங்களாதேஷில் (Bangladesh) எதிர்கட்சித் தலைவியும் ஒரு பெண்ணே. ஷேய்க் ஹஸீனா (Sheikh Hasina). இவர் அவாமிலீக்கின் தலைவர்.

*பங்களாதேஷில்*

பங்களாதேஷில் கடைசியாக 1991 ஆம் ஆண்டு பொதுத்தேர்தல் நடைபெற்றது.

பங்களாதேஷின் அரசமைப்பின் பிரகாரம் 1996ஆம் ஆண்டு வரை தேர்தல் நடத்த முடியாது.

ஆனால்அவாமிக்லீக்தலைமையிலான எதிர்க்கட்சிகள் 1994 பெப்ரவரியில் இருந்து நாடாளுமன்றத்தைப் பகிஷ்கரித்து வருகின்றன.

நடுநிலைமையான காபந்து அரசாங்கத்திடம் உடனடியாக அதிகாரத்தை ஒப்படைத்து விட்டு முன்கூட்டியே தேர்தலை நடத்தும்

**வெளி உலகில்**

படி எதிர்க்கட்சிகள் கோரி வருகின்றன. இதனை ஆளும் கட்சி ஏற்க மறுக்கிறது.

எதிர்க்கட்சிகளின் வேலை நிறுத்தங்கள், மறியல் போராட்டங்களினால் பிரதமர் பேகம் காலெடா ஸியாவின் (Begum Khaleda Zia) அரசாங்கம் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகிறது.

*டாக்டர்கள் வேலை நிறுத்தம்*

கடந்த சில வாரங்களாக பங்களாதேஷில் நடைபெற்று வந்த டாக்டர்கள் வேலை நிறுத்தம் நிலைமையை மேலும் மோசமாக்கியது எனலாம்.

அண்டை நாடான இந்தியாவில் பிளேக் நோய் பரவிப் பேரச்சத்தை ஏற்படுத்திய நிலையிலும் டாக்டர்கள் சம்பள உயர்வுக் கோரிக்கையை முன்வைத்து நடத்திய தமது வேலை நிறுத்தப் போராட்டத்தை கைவிட மறுத்தனர்.

தற்போது நீதிமன்ற உத்தரவுக்கேற்ப வேலை நிறுத்தம் கைவிடப்பட்டுள்ளது.

இந்த வேலை நிறுத்தத்தின்போது நூற்றுக்கு மேற்பட்ட நோயாளிகள் சிகிச்சை



பெனாஸிர்

இன்றி மரணம் அடைந்தனர். சர்வதேச அரங்கில் பங்களாதேஷ் அரசுக்கு இது பெரும் அபகீர்த்தியை ஏற்படுத்தியது.

*பாகிஸ்தானில்*

பாகிஸ்தானில் பெனாஸிர் பூட்டோவின் பாகிஸ்தான் மக்கள் கட்சிக்கு (Pakistan People Party) எதிரான போராட்டத்துக்கு எதிர்க்கட்சித் தலைவரும் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் கட்சியின் தலைவருமான நவாஸ் ஷெரீப் (Nawas Sharif) தலைமை வகிக்கிறார்.

*நவாஸ் ஷெரீப்*

நவாஸ் ஷெரீப் 1990ஆம் ஆண்டு முதல் 1993 ஆம் ஆண்டு வரை சுமார் 32 மாதங்கள் பாகிஸ்தானில் ஆட்சியில் இருந்தவர்.

இவரது ஆட்சிக் காலத்தில் அப்போதைய ஜனாதிபதி குலாம் இஷாக்கானுக்கும் (Ghulam Ishaqkhan) இவருக்கும் இடையில் ஏற்பட்ட அதிகாரப் போட்டியின் போது ராணுவம் தலையிட்டு இருவரையுமே பதவி துறக்க வைத்து பொதுத்தேர்தலை நடத்தி இருந்தது.

1993 ஒக்டோபரில் நடந்த இந்த பொதுத்தேர்தலிலேயே பெனாஸிர் பூட்டோ (Benazir Bhutto) வெற்றி பெற்று ஆட்சியைக் கைப்பற்றினார். எனினும் ஸ்திரமான ஆட்சியை ஏற்படுத்தக் கூடிய பெரும்பான்மை பலத்தை அத்தேர்தலில் அவர் பெறத் தவறி இருந்தார்.

1990 - 93 நவாஸ் ஷெரீப்பின் ஆட்சிக்காலத்தில் பெனாஸிர் பூட்டோ எதிர்க்கட்சித் தலைவியாக இருந்தார். நவாஸ் ஷெரீப்பும் குலாம் இஷாக்கானும் அதிகாரப் போராட்டம் நடத்திக் கொண்டிருந்த காலத்தில் பெனாஸிர் பூட்டோ மறுபுறத்தில் நவாஸ் ஷெரீப்புக்கு எதிராக ஆர்ப்பாட்ட அணி வகுப்புகளை நடத்திக் கொண்

## ராணுவ தலையீட்டுக்கு வழிகோலும் எதிர்க்கட்சிகளின் விஷப் பரீட்சை

டிருந்தார்

1988ஆம் ஆண்டு ஸியா–உல் ஹக்கின் (Zia – Ul Haq) மரணத்துக்குப் பின்னர் ஜனாதிபதியான குலாம் இஷாக்கான் தற்போது அதிகாரத்தில் இல்லை. தற்போது பாகிஸ்தானில்ஜனாதிபதியாக இருப்பவர்பாறூக் லெஹாறி (Farooq Leghari)) 1993 ஒக்டோபர் தேர்தலில் வெற்றி பெற்ற பெனாஸிர் பூட்டோ தனது சகாவான பாறூக் லெஹாறியை ஜனாதிபதி தேர்தல் வேட்பாளராக நிறுத்தி அவரை வெல்ல வைப்பதில் வெற்றி கண்டார்.

*செப் - 11 காலக்கெடு*

பெனாஸிர் பூட்டோ பதவி விலக வேண்டும் என்று நவாஸ் ஷெரீப் கோரி வருகிறார். இதற்காக அவர் செப்ரெம்பர் 11 காலக்கெடுவும் விதித்திருந்தார். காலக்கெடு முடிவடைந்த பின்னர் இவர் ஆரம்பித்த போராட்டம் பாகிஸ்தான் அரசியலில் நிச்சயமற்ற தன்மையை ஏற்படுத்தி இருக்கிறது.

பெனாஸிர் பூட்டோவின் மக்கள் கட்சி அரசாங்கம் அரசமைப்பு விரோத, சட்ட விரோத, ஜனநாயக விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாக நவாஸ் ஷெரீப் குற்றம் சாட்டி வருகிறார். பெனாஸிர் அரசின் பாசிஸவாதப் போக்கை நவாஸ் ஷெரீப் வன்மையாகக் கண்டித்து வருகிறார்.

பாகிஸ்தான் நகரங்களில் நவாஸ் ஷெரீப் தலைமையில் சமீபத்தில் நடைபெற்ற அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் பல்லாயிரக்கணக்கானோர் கலந்து கொண்டது பெனாஸிரின் எதிர்கால அரசியலுக்கு ஓர் அச்சுறுத்தல் ஆகும்.

1993 ஒக்ரோபர் பொதுத் தேர்தலில் பெனாஸிர் பூட்டோ பதவிக்கு வந்த பின்னர் முதல் ஆறு மாத காலமும் சுமுகமாகக் கழிந்தது.

தனது சகாவான பாறூக் லெஹாறியை ஜனாதிபதியாக்கியது மூலம், நவாஸ் ஷெரீப்புக்கும் குலாம் இஷாக்கானுக்கும் இடையிலான அதிகாரப் போராட்டம் போன்ற ஒன்று மீண்டும் ஏற்படாமல் தவிர்த்துக் கொண்டார் பெனாஸிர்.

பாகிஸ்தான் மக்கள் கட்சியின் கூட்டுத் தலைமைப் பதவியில் இருந்து தனது தாயாரான நுஸ்ரத் பூட்டோவை (Nusrat Bhutto) வெளியேற்றியது மூலம் தனது சகோதரர் முர்தாஸா பூட்டோவின் (Murtaza Bhutto) செல்வாக்கை மழுங்கடித்தார்.

பெனாஸிர் பூட்டோவின் தந்தையாரான சுல்பிஹார் அலி பூட்டோ (Zulfikar Ali Bhutto) 1967 ஆம் ஆண்டு பாகிஸ்தான் மக்கள் கட்சியை நிறுவினார்.

இராணுவத் தளபதி ஸியா — உல் ஹக் தலைமையில் 1977 ஆம் ஆண்டு நடைபெற்ற இராணுவப் புரட்சி

**சூரியகாந்தி**
உதயன்
ஞாயிறு சிறப்பம்சம்

யின் போது அவர் பதவி நீக்கம் செய்யப்பட்டு இரண்டு வருடங்களின் பின்னர் தூக்கிலிடப்பட்டார்.

1988 ஆம் ஆண்டு விமான விபத்து ஒன்றில் மர்மமான முறையில் கொல்லப்படும் வரை ஸியா — உல் ஹக் பாகிஸ்தானின் ஜனாதிபதியாக இருந்தார்.

தமது கணவரான சுல்பிஹார் அலி பூட்டோவின் காலத்தின் பின்னர் மக்கள் கட்சியின் கூட்டுத் தலைமைப் பதவியில் அமர்த்தப்பட்ட தம்மை பதவி விலக்க பெனாஸிருக்கு அதிகாரம் கிடையாது என்கிறார் பேகம் பூட்டோ.

ஆனால் தனது தாயார் பேகம் பூட்டோவை மட்டும் அல்ல சகோதரர் முர்தாஸா பூட்டோவையும் ஓரம் கட்டுவதில் பெனாஸிர் வெற்றி கண்டுள்ளார். 1971 பங்களாதேஷ்யுத்தத்தின்பின்னர்சுல்பிஹார் அலிபூட்டோ பாகிஸ்தானில் பிரதமராகப் பதவி ஏற்றிருந்தார்.

*பங்களாதேஷ் யுத்தம்*

பங்களாதேஷும் பாகிஸ்தானும் முன்னர் இந்தியாவுடன் இணைந்திருந்தன. பாகிஸ்தான் 1947ஆம் ஆண்டு தனிநாடாகியது.

1971ஆம் ஆண்டு கிழக்குப் பாகிஸ்தான் மேற்குப் பாகிஸ்தானில் இருந்து பிரிந்து பங்களாதேஷ் என்ற பெயரில் தனிநாடாகியது.

1971இல் பங்களாதேஷின் முதலாவது பிரதமராகப் பதவியேற்ற அவாமி லீக் தலைவர் ஷேய்க் முஜிபுர் ரஹ்மான் பதவியேற்ற குறுகிய காலத்தில் இராணுவப் புரட்சி மூலம் கொல்லப்பட்டார்.

இவர் கொல்லப்பட்ட பின்னர் பதவிக்கு வந்த அரசுகள் புரட்சிகளினாலும், அரசியல் படுகொலைகளினாலும் நிலை குலைந்தன.

1991 இல் பங்களாதேஷில் சுதந்திரமான தேர்தல் நடைபெறும் வரை இந்த நிலையே நீடித்தது.

தென் ஆசியாவில் அரசியல் குழப்பம் நிறைந்த நாடுகளில் பாகிஸ்தான்— பங்களாதேஷ் ஆகிய இருநாடுகளுமே முன்னணியில் இருந்து வருகின்றன.

பாகிஸ்தானைப் பொறுத்த வரை முஸ்லிம் லீக் தலைவர் நவாஸ் ஷெரீப் செல்வாக்கு மிக்கவராகக் கருதப்பட்டு வருகிறார்.

கடந்த கால பாகிஸ்தான் வரலாற்றில் பாகிஸ்தானில் பதவியில் இருந்த அரசாங்கங்கள் ஆட்சி செய்ய முடியாது



நவாஸ் ஷெரீப்

நிலை குலைய எதிர்க்கட்சியினரே காரணமாக இருந்துள்ளனர்.

முஸ்லிம் லீச் தலைவர் நவாஸ் ஷெரீப் பாகிஸ்தானிடம்அணுக்குண்டு இருப்பதாக கடந்த ஒகஸ்ட்டில் அறிவித்ததே அமெரிக்காவின் எதிர்ப்பைத்தேடிக் கொடுத்து பெனாஸிர் அரசைத் தனிமைப்படுத்துவதற்கே

பாகிஸ்தானிடம் மட்டும் அல்ல இஸ்ரேல், ஈராக், வடகொரியா, தென் ஆபிரிக்கா ஆகிய நாடுகளிடமும் அணுக்குண்டுகள் இருப்பதாகச் சந்தேகிக்கப்படுகிறது. ஆனால் இந்த நாடுகள் இதனை மறுத்து வருகின்றன,

1974 ஆம் ஆண்டு இந்தியா தனது முதலாவது அணுக்குண்டைப் பரிசோதித்தது. ஆனால் தன்னிடம் அணுகுண்டு கிடையாது என்றும் சமாதான நோக்கங்களுக்காகவே அணுசக்தியைப் பயன்படுத்தி வருவதாகவும் இந்தியா கூறுகிறது.

இந்தியாவின் கூற்றை அமெரிக்காவும் ஏனைய நாடுகளும் நம்புகின்றன. ஆனால் பாகிஸ்தானை அவை நம்பத் தயாரில்லை. நவாஸ் ஷெரீப்பின் கூற்றை பெனாஸிர் பூட்டோ நிராகரித்தாலும் பாகிஸ்தானிடம் அணுகுண்டு இருக்கலாம் என்ற அமெரிக்காவின் சந்தேகத்தை இது மேலும் வலுப்படுத்தி உள்ளது.

1987 ஆம் ஆண்டு ஆப்கானிஸ்தானில் சோவியத் துருப்புகளுக்கு எதிராக அமெரிக்காவின் கவனம் தீவிரமடைந்திருந்த சமயம், பாகிஸ்தான் அதனை வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொண்டு அணுக்குண்டை தயாரித்திருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

**ராணுவத் தலையீடு**

பாகிஸ்தானிலும் பங்களாதேஷிலும் தற்போது நடைபெற்று வரும் கிளர்ச்சிகள் அந்த இரண்டு நாடுகளிலுமே பெரும் அரசியல் ஸ்திரமின்மையை ஏற்படுத்தி உள்ளன.

பாகிஸ்தானைப் பொறுத்த வரை, ஒரு காலத்தில் பர்மாவில் இருந்தது போன்று நாடாளுமன்ற ஜனநாயக ஆட்சியில் இராணுவத்தின் தலையீடு இருந்து வருகிறது.

பெனாஸிரின் தந்தை சுல்பிஹார் அலி பூட்டோவின் ஆட்சிக்கு எதிராக நடத்தப்பட்ட கிளர்ச்சியின் போது 1977இல் இராணுவம் தலையிட்டது.

அதே போன்று கடைசியாக 1993 இல் ஜனாதிபதி குலாம் இஷாக் கானுக்கும்— பிரதமர் நவாஷ் ஷெரீப்புக்கும் இடையிலான அதிகாரப் போராட்டத்தின் போதும் ராணுவம் தலையிட்டது.

ஆனால் முன்னைய காலங்களைப் போல் அல்லது கடைசியாக இடம் பெற்ற தலையீடு மத்தியஸ்தம் செய்யும் நல் நோக்கத்துடனேயே இடம் பெற்றது.

தற்போது பாகிஸ்தானில் மீண்டும் கிளர்ச்சிகள் ஆரம்பித்திருப்பதால் மீண்டும்

**சஞ்சாரன்**

ராணுவத் தலையீட்டுக்கே வழி வகுக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

மீண்டும் ராணுவம் தலையிடுமானால் பாகிஸ்தானில் நாடாளுமன்ற ஜனநாயகம் என்பது கேலிக்கூத்தாகி விடும்.

அத்துடன் இந்த இரு எல்லை நாடுகளும் அரசியல் ரீதியில் பலவீனப்படுவது இந்தியாவின் பிராந்திய வல்லாதிக்கத்துக்கு வாய்ப்பாகி விடும். ★

---

# தொழுநோயை ஆரம்ப நிலையில் இனங்கண்டு குணப்படுத்த முடியும்

*தொழுநோயை ஆரம்பநிலையில் இனங்காண்பதன் மூலம், பூரணமாக அங்கவிகாரமின்றி நோயாளியைக் குணப்படுத்த முடியும் என்று யாழ். மாவட்ட தொழுநோய் கட்டுப்பாட்டு உத்தியோகத்தர் திரு. மு. குணரத்தினம் கூறுகிறார்.*

*இது தொடர்பாக அவர் உதயனுக்கு அளித்த பேட்டி இங்கு பிரசுரமாகின்றது.*

*பேட்டி கண்டவர்: தெல்லியூர் குமார்.*

கி. மு. 600 ஆண்டுகளுக்கு முன் இந்தியாவில் குஷ்ட என்ற இடத்தில் முதன்முதலாக தொழுநோய் தோன்றியது.

பின்னர் அங்கிருந்து போர் வீரர்கள் மூலம் அமெரிக்கா, ஐரோப்பா, கிரேக்கம், ஆபிரிக்கா ஆகிய நாடுகளுக்கும்—

வியாபாரிகள் மூலம் சீனா, ஜப்பான், கொரியா ஆகிய நாடுகளுக்கும் இந்த நோய் பரவியது.

உலகில் இந்த நோய் கூடுதலாக இந்தியா, இலங்கை உள்ளிட்ட தென்கிழக்கு ஆசிய நாடுகளிலும், ஆபிரிக்கா மற்றும் அமெரிக்கா உட்பட 152 நாடுகளிலும் காணப்படுகிறது.

உலகில் தொழுநோயால் பீடிக்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை ஒரு கோடி முதல் ஒரு கோடி 20 லட்சம் வரையாகும் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

*இலங்கை — யாழ். மாவட்டத்தில்*

தொழுநோய் காரணமாக இலங்கையில் 2 ஆயிரத்து 130 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். பராமரிப்பில் உள்ளோரின் எண்ணிக்கை 4 ஆயிரத்து 795 ஆகும். இந் நோய் காரணமாக அங்கவீனர்களாகியோரின் எண்ணிக்கை 841 ஆகும்.

யாழ். மாவட்டத்தில் 167 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். 257 பேர் பராமரிப்பில் உள்ளனர்; அங்கவீனர்களாகியுள்ளோரின் எண்ணிக்கை 93 ஆகும்.

*நோய்க்கிருமி*

மைக்கோபக்ரீறியம் லெப்றே (Mycobacte Rium Leprae) என்ற கிருமியே இந்நோயை உண்டாக்குகிறது. இக் கிருமி சிகிச்சை பெறாத தொழுநோயாளியின் உடலில் உற்பத்தியாகிறது.

நோயாளியின் மூக்கில் இருந்து வெளிவரும் சளி, இரத்தம் ஆகிய கழிவுப் பொருள்கள் மூலமும் புண்ணிலிருந்து வெளிவரும் இரத்தம், சீழ் ஆகிய கழிவுகளின் மூலமும் இக் கிருமி மனிதனின் உடலில் இருந்து வெளியேறுகிறது.

*எப்படி தொற்றுகிறது?*

வெளிச்சுவாசக் கால்வாய், உணவுக் கால்வாய் மற்றும் தோலில் ஏற்படும் காயம் சிராய்வு ஊடாக இக்கிருமி மனிதனின் உடலில் உட்செல்கிறது. எனினும் இக்கிருமி முக்கியமாக சுவாசக் கால்வாய் ஊடாகவே உட்செல்கிறது.

இந்த நோயின் அரும்பு காலத்தை இடமாகக் கூற முடியாது. 3 மாதம் முதல் 15 வருடம் வரையுள்ள காலப் பகுதியில் இந்த நோய் தொற்றுகின்றது.

இந்நோய்க் கிருமிக்கு எதிரான எதிர்ப்புச் சக்தி உள்ளோருக்கு இந் நோய் ஏற்படாது. குறைவான எதிர்ப்புச் சக்தி உள்ளவருக்கு தொற்றாத தன்மையான நோய் (Panci Bacillary) ஏற்படுகிறது. எதிர்ப்புச் சக்தி முற்றாக இல்லாதோருக்கு தொற்றும் தன்மையான (Multi Bacillary) நோய் ஏற்படுகின்றது.

*தொற்றாத நோயின் அறிகுறிகள்*

தொற்றாத தன்மையுள்ள நோய் பெரும்பாலும் தனித் தேமலாக, செம்பொன் அல்லது வெளிறிய வெண்மை நிறத்தில், ஓரம் ஒழுங்காக வரையறுக்கப்பட்டு தோலிலிருந்து சற்று தடித்துக் காணப்படும். தேமலில் மேற்புறத்தே உரோமம் இருக்காது; மேற்பகுதியில் வியர்வை இருக்காது. ஆரம்ப காலத்தில் தேமலின் மேற்புறத்தில் சிறுபஞ்சு அல்லது கோழி இறகினால் தொடும் போது கூட தொடுகை உணர்ச்சி இருக்காது. பிந்திய காலத்தில் தேமலின் பின்

**மருத்துவம்**

புறத்தில் ஊசியால் குத்தினாலோ, நெருப்பால் சுட்டாலோ நோவோ, வலியோ உணரப்பட முடியாத நிலை இருக்கும். தேமலின் மேற்பகுதி காய்ந்து கரடுமுரடாக விருக்கும்.

*தொற்றும் நோயின் அறிகுறிகள்*

கண் இமையின் மேற்புருவங்களில் உரோமம் குறைவாக அல்லது இல்லாமலும் இருக்கும். காதுச்சோணைகள் தடித்து அல்லது செந்நிறமான பருக்கள் அல்லது கட்டிகள் நிறைந்து காணப்படும். மூக்கு ஆரம்பத்தில் வீக்கமடையும். பின் காலம் செல்ல மூக்கின் உட்புறம் புண் — சீழ் — [illegible] சிதைவு ஏற்பட்டு மூக்கின் உட்பக்க எலும்பு [illegible] யாக சிதைவடைந்து மூக்கு விகாரமடையும்.

மயிர்கொட்டி உடம்பில் பட்டால் ஏற்படுவது போன்ற மெதுமெதுப்பான சிறு தேமல்கள் அல்லது தழும்புகள் பல உடம்பு முழுவதும் ஏற்படும். இவற்றால் கடியோ, உபாதையோ இருக்காது. உடம்பு முழுவதும் முக்கியமாக கை, கால், மார்பு, காதுப் பகுதிகளில் செந்நிறமான பரு அல்லது கட்டிகள் காணப்படும். எண்ணெய் பூசிய பின் வெய்யிலில் நிற்கும் போது ஏற்படும் மினுமினுப்புடன் கூடிய வீக்கம் முகம், கை, கால் போன்ற பகுதிகளில் காணப்படும்.

*நரம்பு மண்டலம் பாதிப்பு*

இந்த நோயின் கிருமிகளால் நரம்பு மண்டலம் தாக்கப்படுகின்றது. ஆரம்பத்தில் நரம்பு மண்டலத் தொகுதி பாதிக்கப்படாவிட்டாலும், காலம் செல்லச் செல்ல முக்கியமாக சுற்றியல் நரம்புத் தொகுதி பாதிக்கப்பட்டு, செயலிழக்கிறது. ஆரம்பத்தில் தோலின் உட்பகுதியில் இருக்கும் நோய்க்கிருமி காலக்கிரமத்தில் இந் நரம்புகளின் வெளிச் சவ்வுகளில் பற்றிப் பரவுகிறது. பின்னர் இவற்றின் பெருக்கத்தினால் நரம்பின் செயற்பாடு பாதிக்கப்படுகிறது.

முக்கியமாக, பாதிப்புக்குள்ளான பகுதியில் உணர்ச்சி அற்ற தன்மை, தோலின் செயற்பாடு அற்ற நிலை, தோல்வரட்சி ஆகிய காரணிகளால் இப்பகுதிகளில் அடிக்கடி புண்கள் ஏற்படும். இவை எளிதில்குணமடையமாட்டா. முக்கியமாக உள்ளங்கை, [illegible] பாரம் தாங்கும் பகுதிகளில் புரையோடிய புண்கள் ஏற்படுகின்றன.

*முற்றாக குணப்படுத்த முடியும்*

இந்நோயை முற்றாக குணப்படுத்த முடியும்.நோயாளியை அங்கவிகாரமின்றி பூரணமாகச் சுகப்படுத்த, ஏனையோருக்கு இந்த நோய் தொற்றாதிருக்க ஆரம்பத்திலேயே சிகிச்சை பெற வேண்டும் சிகிச்சை பெறும் நோயாளியினால் இந்த நோய் தொற்றுவது கிடையாது.

தொற்றும் தன்மையான நோய்க்கு 24 மாதங்களும் தொற்றாத தன்மையான நோய்க்கு 6 மாதங்களும் சிகிச்சை பெறவேண்டும்.

இந்த நோய்க்கு எதிரான தடுப்பு மருந்து தற்போது கிடையாது. இது தொடர்பாக உலக சுகாதார ஸ்தாபனம் ஆய்வு செய்து வருகின்றது. அது பாவனைக்கு வர இன்னும் பல வருடங்கள் ஆகலாம்.

*நோய் வராமல் தடுப்பது எப்படி?*

இந்த நோயின் அறிகுறிகளை மக்கள் அறிவதன் மூலம் அவர்களாகவே ஆரம்பத்தில் இதற்கு சிகிச்சை பெற்றால் இதனை முற்றாகக் குணப்படுத்த முடியும். 80 சத வீதமான நோயாளர்கள் தொற்றாத் தன்மையுடையவர்களே. எனவே அவர்கள் தமக்கு ஏற்படும் தேமல்களை தாமாகவேபரிசோதித்து, நோய்க்குரிய காரணிகள் ஏதும் இருப்பின் சிகிச்சை நிலையம் வந்து [illegible] செய்து சிகிச்சையைப் பெற முடியும்.

யாழ்.மாவட்டத்தில் இதற்குரிய சிகிச்சைகள் யாழ். போதனாவைத்திய சாலையின் தோல்கிளினிக்கில் ஒவ்வொரு புதன்கிழமைகாலையிலும்—

புத்தூர்,அச்சுவேலி, தொல்புரம், பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, சாவகச்சேரி, கிளிநொச்சி ஆகிய வைத்திய சாலைகளில் இதற்கு என்று குறித்த தினத்தில் மாதம் ஒரு முறையும் வழங்கப்படுகின்றன.

இந்த நோயின் மூலம் அங்கவிகாரம் ஏற்பட்டால் அதனைத் திரும்ப சரி செய்ய எமது நாட்டில் வசதி இல்லை. அங்க விகாரமின்றி எம்மைப் பாதுகாப்பதற்கு ஆரம்ப நிலையில் சிகிச்சை பெறுவதே சிறந்த வழி.சிகிச்சை பெறும் நோயாளி மனைவி குழந்தைகள் மற்றும் சுற்றாடலுடன் சேர்ந்து நிச்சயமாக சாதாரண வாழ்க்கையை நடத்த முடியும்.

தொழுநோயினால் பீடிக்கப்பட்ட நோயாளியை இனங்கண்டு சிகிச்சை அளிக்க முன்னர் இவரால் இவருடன் நெருங்கிப் பழகியோருக்கு இந்நோய் தொற்றியிருக்கலாம். நோய் தொற்றி 2 வருடங்கள் கழிந்தே அறிகுறிகள் தெரியும். எனவே நோயாளியை அண்டியிருக்கும் குடும்பத்தினர் சிகிச்சை நிலையம் சென்று 6 மாதங்களுக்கு ஒரு தடவை வீதம் 5 ஆண்டுகள் வரை பரிசோதித்து வரவேண்டும். இதன் மூலம் நோய் தொற்றுவதை ஆரம்பத்தில் கண்டு சிகிச்சை பெற்று தம்மையும் சமூகத்தையும் காப்பாற்ற முடியும். ★


யாழ். கல்வித்திணைக்களமும்
(வலயம் - 2)
அகதிகள் புனர்வாழ்வு நிறுவனமும்
இணைந்து நடத்தும்

**தொழிற்திறன் அபிவிருத்தி பயிற்சி நெறி**

**விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன:**

*பயிற்சி நெறி:*
தமிழ் தட்டச்சு சுருக்கெழுத்துப் பயிற்சி நெறி

*இடம்:*
யா/சுழிபுரம் விக்ரோரியா கல்லூரி

*தகைமைகள்:*
1. ஜி. சி. ஈ. (சாதாரணம்) பரீட்சையில் தமிழ் திறமைச் சித்தியுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
2. வயதெல்லை:
**25** (ஆண், பெண் இருபாலரும்)

★ விண்ணப்ப முடிவு திகதி: **20 — 10 — 1994**

★ விண்ணப்பங்கள் யாவும் சுயவிவரங்களுடன் மேற்குறிப்பிட்ட பாடசாலை அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

[சி-9299]


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ஜனாதிபதித் தேர்தலில் ஆதரவு யாருக்கு?

# இ.தொ.கா. முன் வைத்துள்ள ஆறு அம்ச கோரிக்கைகள்

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலின் போது எந்த வேட்பாளருக்கு ஆதரவு வழங்குவது என்பதனைத் தீர்மானிப்பதற்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் நிறைவேற்றுக்குழு தனது தீர்மானத்தினை ஒக்ரோபர் மாதம் 15 ஆம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளது. தோட்டத் தொழிலாளர்களின் நலன்களை உள்ளடக்கிய 6 பிரதான கோரிக்கைகளை இனம் கண்டு அக்கோரிக்கைகள் மீதான தீர்வில் எந்தக் கட்சியைச் சேர்ந்த ஜனாதிபதி வேட்பாளர் (பொதுஜன ஐக்கிய முன்னணி அல்லது ஐ.தே.க.) இதய சுத்தியுடன் ஆர்வம் காட்டி நடவடிக்கைகள் மேற்கொள்கின்றாரோ அதன் அடிப்படையில் தீர்மானம் மேற்கொள்வதற்கு இ.தொ.கா. தலைவர் எஸ். தொண்டமானுக்கு தாம் அதிகாரம் அளிப்பதாக மேற்படி நிறைவேற்றுக்குழு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இது சம்பந்தமாக விடுக்கப்பட்டிருக்கும் அறிக்கையில் இ.தொ.கா. நிறைவேற்றுக்குழு மேலும் தெரிவித்திருப்பதாவது:-

தேசிய அளவில் ஒரு தொழிலாளர் அமைப்பாக இருந்து வரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பெருந்தோட்டத்துறை சார் தொழிலாளர் சகலரினதும் பிரதிநிதியாக உள்ளது. இந்த அமைப்பு அதன் தொழிற் சங்க பேரம் பேசும் சக்தி வாயிலாகவும், தொழிற் சங்க நடவடிக்கைகள் மூலமாகவும் இதுவரை தோட்டத் தொழிலாளரின் பல்வேறு உரிமைகளை வென்றெடுத்துக்கொடுத்துள்ளது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் 1965 ஆம் ஆண்டு முதல் ஐ.தே.கவுடன் நெருங்கிய உறவு கொண்ட ஓர் இயக்கமாக இருந்திருப்பதுடன் 1978 ஆம் ஆண்டு முதல் 1994 ஆகஸ்ட் மாதம் வரை அவ்வரசாங்கத்தில் பிரதான அமைச்சராக இ.தொ.கா. தலைவர் இருந்தும்வந்துள்ளார். இந்த உறவு தோட்டத் தொழிலாளரின் வாழ்க்கையில் ஸ்திர நிலையும், சுபீட்சமும் ஏற்பட ஐ.தே.க உதவும் என்ற நம்பிக்கையிலேயே ஏற்படுத்தப்பட்டது.

இந்திய வம்சாவளி மக்களின் நாடற்ற நிலைமைக்கு முற்றுப் புள்ளி வைத்ததுடன் தோட்டத்துறை சார்ந்திருந்த இம்மக்களின் கல்வி முறையை தேசிய கல்வி முறையுடன் இணைத்தது. எனினும் இதன் மூலம் தோட்டத் தொழிலாளரின் பிள்ளைகளின் பின் தங்கிய கல்வி நிலையை ஒழிக்க கூடுமானதாக இல்லை. மற்றும் அரை நூற்றாண்டுக்கு மேல் இந்திய வம்சாவளி மக்கள் பட்சபாதமாக நடத்தப்பட்ட நிலைமை மாறி இன்று நாட்டின் ஏனைய சக பிரஜைகளுடன் சமமாக வாழும்நிலை தோன்றியுள்ளது.

இந்த நிலையில் பதவிக்கு வந்துள்ள புதிய பொது ஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் அதன் பழைய இனவாத, இன ஒதுக்கல் அரசியலை கைவிட்டு சமாதான அரசமைக்க முன்வந்துள்ளபோதும் அதன் கொள்கையறிக்கையில் தோட்டத் தொழிலாளர்களின் பிரதான பிரச்சினைக்குத் தீர்வுகள் எதுவும் காணப்படவில்லை. இவ் அரசு கோதுமை, பாண், மண்ணெண்ணெய், டீசல் போன்றவற்றின் விலையைக் குறைத்து வாழ்க்கைச் செலவைக் குறைக்க முன்வந்தபோதும் இது தோட்டத் தொழிலாளரின் வாழ்வில் எதுவித மாற்றத்தையும் கொண்டு வரவில்லை.

எனவே தோட்டத் தொழிலாளரின் பின்வரும் பிரதான 6 பிரச்சினைகள் தொடர்ந்தும் பாராமுகமாகவே உள்ளன.

(1) தோட்டத்துறை சார்ந்ததாக உள்ள சுகாதார முறைமை மற்றும், பிள்ளைப் பேறு வார்டுக்கள், தேசிய சுகாதார முறைமையுடன் இணைக்கப்பட வேண்டும்.

(2) மாதத்தில் 25 நாள்கள் வேலை வழங்கி வருமானத்துக்கு உத்தரவாதமளித்தல்.

(3) கம்பனிகளின் நிர்வாகத்தின் கீழும், தனியாரின் நிர்வாகத்தின் கீழும் உள்ள தோட்டங்களில் நிலவுகின்ற பாரபட்சமான சம்பள அளவுத் திட்டங்களை ஒழித்தல்.

(4) வீட்டையும், வீட்டுத் தோட்டத்தையும் தொழிலாளருக்கு உடைமையாக்குவது தொடர்பில் தற்போது நடைமுறைப் படுத்தப்படவுள்ள திட்டத்தில் திடமான கொள்கை வெளிப்படுத்தப் படாமை.

(5) 1993ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் வழங்கப்பட்ட 500/- வாழ்க்கைச் செலவு கொடுப்பனவை பெறும் பொருட்டு ஏற்பட்ட 8/- நாளாந்த சம்பளப் பாக்கியினை பெற்றுக் கொடுத்தல்.

(6) பெருந்தோட்டத்துறை சமூகத்தை ஏனைய சக சமூகங்களில் இருந்து பிரித்து பாரபட்சமான சமூக நிலைக்கு இட்டுச் செல்லும் அம்சங்களை ஒழித்துக் கட்டி சமூக நலன்புரி அரச நிர்வாக அமைப்பைத் தோற்றுவித்தல்.

இத்தகைய பிரச்சினைகள் தொடர்பில் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் போதியளவு அக்கறை காட்டாததால் எதிர் வரும் ஜனாதிபதி தேர்தலின் போது பொ.ஐ.ஐ.மு. வேட்பாளருக்கா அல்லது ஐ.தே.க. வேட்பாளருக்கா ஆதரவு வழங்குவது என்ற கேள்வி தொடர்பில் முடிவெடுக்க இ.தொ.காவின் நிறைவேற்றுக்குழு அதன் தலைவர் எஸ். தொண்டமானுக்கு அதிகாரமளிக்கின்றது. அதன் பிரகாரம் இ.தொ.கா. தலைவர் எந்த வேட்பாளர் மேற்படி பிரச்சினைகளுக்கான தீர்வுகளை முன்வைக்கிறாரோ அதனை ஆராய்ந்து தனது ஆதரவை யாருக்கு வழங்குவது என்று ஒக்ரோபர் மாதம் 15 ஆம் திகதி தீர்மானிப்பார்.—என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஓ)

## குழாய்கிணறுகள்

கொழும்புத்துறை, ஒக்.9

யாழ் கலட்டி குடியேற்றத் திட்டத்தின் குழாய்க்கிணறு அமைக்கும் வேலையில் தேச நிர்மாணிகள் துரிதமாக ஈடுபட்டுள்ளனர்.

அநேக குடியிருப்புப் பிரதேசங்களிலுள்ள குடிநீர்ப்பிரச்சினையைதீர்க்குமுகமாக ஜேர்மன் உதவித் திட்டத்தின் கீழ் பல இடங்களிலும் தேசநிர்மாணிகள் குழாய்க்கிணறுகளை அமைத்துவருகின்றனர்.

இப்பணி பாடசாலைகள் சனசமூக நிலையங்கள் பொது இடங்கள் பலவற்றிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

(க-30)

## முத்திரைகள் தாராளம்

யாழ்ப்பாணம், ஒக். 9

'கோமாரி' கப்பல் மூலம் கொண்டுவரப்பட்ட பெருமளவு ஒரு ரூபா முத்திரைகள், வான் கடிதங்கள் யாழ். பிரதம தபாலகத்திற்கு எடுத்துவரப்பட்டுள்ளன.

தேவையானோர் யாழ். பிரதம தபாலகத்தில் இவற்றைப் பெற்றுக் கொள்ளலாம் என்று யாழ். பிரதம தபாலதிபர் திரு. சு. கோடீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

(ஓ-4-17)

## சித்த வைத்திய ஆராய்ச்சி மாநாடு நடத்த ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஒக்.9

சித்தவைத்திய ஆராய்ச்சி மாநாடு ஒன்றை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கான ஒழுங்குகள் தற்போது சித்த வைத்திய ஆராய்ச்சி மன்றத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன

மூன்று நாட்கள் நடைபெற உள்ள இம்மாநாடு ஒவ்வொரு நாளும் இரண்டு அமர்வுகளாக நடைபெறும். காலையில் ஆராய்ச்சி கட்டுரைகளும் மாலையில் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

சென்ற மாதம் 15 ஆம் திகதி சித்த வைத்திய ஆராய்ச்சி நிலையத்தில் நடைபெற்ற ஆராய்ச்சி மன்றக் கூட்டத்தில் இதுபற்றித் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இம்மாநாட்டை ஒட்டி சித்தவைத்தியம் சம்பந்தமான கவிதை, கட்டுரை, நாடக போட்டிகள் நடத்தப்படவிருக்கின்றன.

சித்த வைத்தியத்தை ஆராய்ச்சிகளின் மூலம் விஞ்ஞான மருத்துவமாக நிறுவ முயல்வதே மாநாட்டின் முக்கிய நோக்கமாகும் என்றும் மேற்கொண்டும் ஆராய்ச்சிகளை வளர்ப்பதற்கு இம் மாநாடு ஒரு தூண்டுகோலாக அமையும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஏ-4)

## இன்று

''கைவல்ய நவநீதம்'' அடங்கிய அத்வைதவேதாந்த சொற்பொழிவு நிகழ்ச்சிகளை இன்று ஞாயிறு காலை 9 மணியளவில், உடுவில் கிழக்கு கடவுள் சந்நிதியில், வைத்திய கலாநிதி திரு. வ. சின்னப்பு நிகழ்த்துவார்.


G. C. C.

வைத்திய நிபுணர் ஆலோசனை நிலையம்

514/14, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(பழைய O. P. D. முன்பாக)

கண், காது, மூக்கு, தொண்டை [E. N. T.] முறிவு மகப்பேறு, சத்திரசிகிச்சை சிறுபிள்ளைகளுக்குரிய வைத்தியம், சரும நோய்கள் என்பவற்றுக்கு விசேட வைத்திய நிபுணர்களினால் ஆலோசனை வழங்கப்பட்டு வருகின்றது. இத்துடன் மருத்துவ ஆய்வுகூட சேவைகளும் (E. C. G.) இங்கு நடைபெறுகின்றன.

—நிர்வாகி.

(33254)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து கீழே குறித்த பதவிகளுக்கான விண்ணப்பங்கள் 1994-11-11 ஆம் திகதி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

1. தற்காலிக உதவி விரிவுரையாளர் தாவரவியல்/விலங்கியல் / பௌதிகவியல் / இரசாயனவியல் / கணிதமும் புள்ளிவிவரவியலும்/ கணனி விஞ்ஞானம்.
2. தற்காலிக செயன்முறை காட்டுநர் தாவரவியல்/விலங்கியல் / பௌதிகவியல் / இரசாயனவியல்/கணனி விஞ்ஞானம்.
3. தற்காலிக போதனாசிரியர் கணிதமும் புள்ளிவிவரவியலும் / கணனிப் பகுதி.

**சம்பள அளவுத்திட்டம்**

தற்காலிக உதவி விரிவுரையாளர்;
ரூபா 5270/- (நிலையானது) மாதமொன்றுக்கு

தற்காலிக செயன்முறைக் காட்டுநர் / தற்காலிக போதனாசிரியர்
ரூபா 4420/- (நிலையானது) மாதமொன்றுக்கு

இத்துடன்:

நிலுவையிலுள்ள வேலை நிறைவேற்றுப் படியாக 1994 டிசம்பர் 31 ஆம் திகதி வரை சம்பளத்தில் 25 சதவீதத்திற்கு சமமான தொகை செலுத்தப்படும்.

1993 மே 12ஆம் திகதி 9/93 இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு ஏற்ப மாதாந்தப் படியாக 600/- ரூபா செலுத்தப்படும்.

**தகைமைகள்:**

I. தற்காலிக உதவி விரிவுரையாளர்

1. பொருத்தமான பாடத்தில் சிறப்புப் பட்டமொன்றில் முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பு (மேற் பிரிவு)
   அல்லது
2. பொருத்தமான பாடத்தில் சிறப்புப் பட்டமொன்றில் இரண்டாம் வகுப்பு (கீழ் பிரிவு)
   அல்லது
3. பொருத்தமான பாடத்தில் சிறப்புப் பட்டத் ... ன் பொருத்தமான துறையில் அங்கீகரிக்கப்பட்ட பட்டப்பின் படிப்பில் சித்தி.
   அல்லது
4. உயர் கல்வி நிறுவனத்தின் சிபார்சின் படி பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு தகைமைகள்.

2. தற்காலிக செயன்முறை காட்டுநர்/ போதனாசிரியர்

1. பட்டத்தில் பொருத்தமான பாடத்தை ஒரு பாடமாகக் கொண்ட அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பட்டதாரி

பெறுபேறுகளுக்காக காத்திருப்போரிடமிருந்தும் 1994 இல் இறுதித் தேர்வுக்குத் தோற்றுவோரிடமிருந்தும் பெறப்படும் விண்ணப்பங்களும் பரிசிலனை செய்யப்படும்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கிக் கிளையில் அல்லது பல்கலைக்கழக நிதிக் கிளையில் ஒவ்வொரு விண்ணப்பப்படிவத்திற்கும் ரூபா 20/- செலுத்திய பின்னர் இப் பல்கலைக் கழகத்தின் தாபனக் கிளைச் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளக் கூடிய படிவங்களில் மாத்திரம் விண்ணப்பங்கள் செய்யப்பட வேண்டும். தபால் மூலம் படிவங்களையும் விவரங்களையும் பெற விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நிதியாளரின் பெயரில் பெறப்பட்ட ரூபா 20/- பெறுமதியான காசுக்கட்டளை/ தபாற்கட்டளையுடன் 23x10 ச.மீ., அளவுடைய சுய முகவரியிட்ட ரூபா1/- முத்திரை ஒட்டப்பட்ட கடித உறையையும் அனுப்புதல் வேண்டும். விதிக்கப்பெற்ற படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மாத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத் தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள் ஆகியவற்றின் விண்ணப்பதாரிகள் தமது நிறுவனங்களின் தலைவர்களூடாக விண்ணப்பித்தல் வேண்டும்.

**குறிப்பு:**

விண்ணப்பப் படிவங்களையும் இதர விவரங்களையும் கொழும்பு-13 ஆட்டுப்பட்டித் தெரு 154 ஆம் இலக்கத்திலுள்ள யாழ்ப்பாண கூட்டுறவுக் களஞ்சியத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.

- பதிவாளர்.
யாழ்ப்பாணப்-
பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1994 - 10 - 07

[சி-9303]

## 10-ம் ஆண்டு நினைவஞ்சலி

சின்னப்பு குணசிங்கம்
(காந்தன்)

தோற்றம்: 16 — 07 — 1946
மறைவு: 17 — 08 — 1985

திதி: 09 — 10 — 1994

ஈரைந்து ஆண்டுகளென்ன எத்தனை ஆண்டுகள் சென்றாலும் எம் நெஞ்சில் அழியாது உங்கள் அன்பு;

மனைவி, பிள்ளைகள்.

3ஆம் கட்டை, கல்வியங்காடு,
யாழ்ப்பாணம்.

(33255)

# பனை வளர்ச்சியில் இளம் தலைமுறை போதிய அக்கறை காட்ட வேண்டும்

### கற்பகச்சோலை ஆரம்பநாள் நிகழ்ச்சியில் உரை

இலங்கையின் பொருளாதாரத்தில் தேயிலையும், றப்பரும் எந்த அளவுக்கு முக்கியத்துவம் பெறுகின்றனவோ அதே அளவு முக்கியத்துவம் பனைகளுக்கும் தமிழீழத்தில் உண்டு. நமது முன்னோர் அதன் இன்றியமையாமையை உணர்ந்து அதனைப் பேணி வளர்த்தனர். இன்றைய இளந்தலைமுறையினரும் பனை வளர்ச்சியில் போதிய ஈடுபாடு காட்டவேண்டும்.

வலிகாமம் பகுதியில் கற்பகச் சோலை பனம் பண்ணைத் திட்டத்தில் ஆரம்ப நாள் நிகழ்ச்சியில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் பணிப்பாளர் திரு. ரவி உரையாற்றும் போது இவ்வாறு கூறினார்.

அராலி வீதி கல்லுண்டாய் நரசிம்ம வைரவர் கோயிலடியில் கற்பகச்சோலை பனம் பண்ணைத் திட்டத்தையொட்டி பனம் விதைகள் நடுகை வைபவம் கடந்த 7 ஆம் திகதி இடம்பெற்றது.

வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியின் ஆதரவில் கொத்தணித் தலைவர் திரு. சி. கந்தசாமி தலைமையில் இவ் வைபவம் நடைபெற்றது.

திரு. ரவி மேலும் பேசும் போது கூறியதாவது:

பனைகளின் முக்கியத்துவத்தை உணர்ந்த தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் இதன் அபிவிருத்திக்காகப் பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

ஐந்து ஆண்டுகளில் தமிழீழமெங்கும் ஐம்பது லட்சம் பனைகளை உற்பத்தி செய்யும் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

1992 இல் ஒன்றரை லட்சமும் 1993 இல் மூன்றரை லட்சமுமாக ஐந்து லட்சம் பனம் விதைகள் நாட்டப்பட்டுள்ளன. தொழிலாளர்கள் காட்டிய ஆர்வத்தினால் இத் திட்டத்தின் மாற்று அடிப்படையில் உருவாக்கப்பட்டதே ''கற்பகச் சோலை''.

வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணிப் பொதுமுகாமையாளர் திரு. க. சந்திரராசா உரை நிகழ்த்தும்போது கூறியதாவது;

சங்கானை, சுன்னாகம், தெல்லிப்பழை, மானிப்பாய், பண்டத்தரிப்பு, கோண்டாவில் பகுதிகளை உள்ளடக்கிய ஆறு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களும் அதன் வலிகாமம் கொத்தணியும், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன பனை தென்னை வள அபிவிருத்திப் பிரிவும் இணைந்து அராலி வீதி, கல்லுண்டாய் நரசிம்ம வைரவர் கோயிலடியில் பத்து ஏக்கர் விஸ்தீரணத்தில் கற்பகச் சோலையை அமைத்துள்ளது.

இப்பகுதியில் உள்ள தரவை நிலம் பனங்கூடல் பகுதிகளிலும் கற்றாடல்களிலும் இத் திட்டத்திற்கு அமைவாக ஐம்பது ஆயிரம் பனம் விதைகளை நடுவதற்குத் திட்டமிட்டுள்ளது.

ஆறுசங்கங்களும் இணைந்து ஏற்கனவே ரூபா ஐம்பதாயிரம் செலவில் பனம் விதைகளை நாட்டியுள்ளன. கற்பகச்சோலை திட்டத்தின்கீழ் இம்முறை ரூபா ஒரு லட்சம் செலவிடப்படவுள்ளது. பருத்தித்துறை பனை தென்னை வள அபிவிருத்திச் சங்கமும் ஒரு லட்சம் பனம் விதைகளை தனது பகுதியில் நாட்டவுள்ளது. இது தவிர தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும் அராலி வீதி, கல்லுண்டாய் பகுதியில் முப்பதாயிரம் பனம் விதைகளை நாட்டியுள்ளது குறிப்பிடத்தக்கது.

பனை வள கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு. இ. சபாரத்தினம், பனை தென்னை வள ஒன்றியத் துணைப் பொறுப்பாளர் திரு. கிருஷ்ணகுமார், திருமதி கைலாசநாதன் ஆகியோர் உட்படப் பலர் உரை நிகழ்த்தினார்கள்.

முன்னதாக உதவி அரச அதிபர் திரு. து. வைத்திலிங்கம், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு. சபாரத்தினம் ஆகியோர் மங்கள விளக்கேற்றினார்கள்.

கற்பகச்சோலை பனம் பண்ணைத் திட்ட பெயர்ப்பலகையை திரு. ரவி திரைநீக்கம் செய்து வைத்தார்.

பனை தென்னைவள ஒன்றியப் பொறுப்பாளர் திரு. அருள் ... விதைகளை ... திட்டத்தை ... வைத்... (க-111)

## 31-ம் நாள் நினைவஞ்சலி



அன்னை மடியில் 14 — 08 — 1930
இறைவன் அடியில் 09 — 09 — 1994

அமரர்
சின்னத்தம்பி சோமசுந்தரம்
[ரவிந்திர கபே உரிமையாளர்,
சுன்னாகம்]

அன்பின் பாசத்தின் உறைவிடமே
அப்பா, அப்பா என்று அழுகிறோம்
உங்கள் நிழலில் வாழ்ந்த நாங்கள்
உங்கள் நினைவில் வாழப் போகிறோம்.

பாசமான தந்தையாகவும், சில வேளைகளில் உற்ற நண்பனாகவும், சிரித்து வாழ்ந்த நாட்களையும், ஒரு நிமிடமும் எங்களைப் பிரியாத உங்கள் இதயத்தினையும், நீங்கள் விட்டுப் போன நினைவுகளுடன் தான் வாழப் போகிறோம். அப்பா உங்கள் ஆத்மா சாந்தியடைவதற்கு இறைவனை வேண்டுகிறோம்.

இவர் சுகவீனமாக இருந்த வேளை அன்பாக சேவை புரிந்தும் ஆலோசனை கூறிய டாக்டர் எஸ். சிவானந்தராஜா அவர்களுக்கும், இறுதிக் கிரியைகளின் போது உடன் வந்து உதவிய கனகசபை வீதியைச் சேர்ந்த நண்பர்களுக்கும், இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இன்று நடக்கும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் குடும்ப சமேதராய் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

உங்கள் அன்பான;
மனைவி, பிள்ளைகள்.

[சி-5728]

## 31-ம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 26 — 08 — 1941
மறைவு: 09 — 09 — 1994

அமரர்
Dr. கந்தவனம் வேலாயுதம்பிள்ளை
(Ayur Physician)

நினைக்கவே முடியவில்லை
நீங்கள் மறைந்ததை
நிஜமென்ற போதும்
மனம் ஆறவில்லை
குடும்பக் குவலயத்தை
குன்றெனத் தாங்கிய எந்தையே
கண்ணிற்குள் முகமாய் – மன
எண்ணத்தில் நினைவுகளாய்
மூச்சிற்குள் காற்றாய்
முப்பத்தொரு பகலிரவு
முடிந்தாலும் மறவோமப்பா.

பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்

நறுவிலியடி,
பொலிகண்டி.

(33261)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

292/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

## மின்கட்டண நிலுவை அறவிடலாமா?

★ தனது தேர்தல் பிரசாரத்தின் போது அளித்த வாக்குறுதிப்படி விவசாயிகளுக்கு வங்கிகள் மூலம் வழங்கிய கடனைத் தள்ளுபடி செய்யும் திட்டம் ஒன்றை பிரதமர் சந்திரிகா அறிவித்திருக்கிறார்.

★ வடக்கிற்கு மின்சாரம் வழங்கப்படும் என வெளியான செய்திகளை அடுத்து குடாநாட்டில் மின்பாவனையாளர்கள் செலுத்த வேண்டியிருக்கும் மின் கட்டண நிலுவைகளை அவர்களிடமிருந்து முழுதாக அறவிடுவதற்கு சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி சபைகள் முடிவு செய்து முனைப்புடன் முன்முயற்சிகளை எடுத்திருக்கின்றன.

—இவை இரண்டும் நேற்றுப் பத்திரிகையில் வெளியான செய்திகள்.

வங்கிகளிடமிருந்து விவசாயக்கடனைப் பெற்றுக்கொண்ட விவசாயிகளின் எண்ணிக்கை தெற்கில்தான் அதிகம்; விவசாயக் கடன் பெரிய தொகையில் வழங்கப்பட்டது தெற்கில்தான்.

அந்த விவசாயிகளிடமிருந்து கடனை அறவிடுவதில்லை என பிரதமர் சந்திரிகா தலைமையிலான அரசு எடுத்திருக்கும் முடிவினால் பெருமளவில் பயன்பெறப் போவது தெற்கு — குறிப்பாக சிங்கள — விவசாயிகள் தான்.

ஆதேவேளை—

கடந்த நான்கு ஆண்டுகளாக மின்விநியோகமின்றி பெரும் பாதிப்புகளுக்கு உள்ளான வடபகுதி மின்பாவனையாளர்களிடமிருந்து மின் கட்டண நிலுவை முற்றாக அறவிடப்படவிருக்கிறது.

மின்சார வசதி ஓர் அடிப்படைத் தேவையாகும். நாட்டில் உள்ள ஏனையோருக்கும் கிடைக்கும் இந்த வசதியைப் பெறும் உரிமை வடபகுதி மக்களுக்கும் உள்ளது.

ஆனால் அது கடந்த நான்கு ஆண்டுகளுக்கு மேலாக வடக்கு மக்களுக்கு வழங்கப்படவில்லை. அதனால் அவர்களுக்கு ஏற்பட்ட நஷ்டம் ஏராளம். ஏராளம்.

வடக்கு மக்களின் பொருண்மிய வளத்தையே மின்சார வசதியின்மை பாழ்படுத்தியது எனலாம்.

தான் வழங்க வேண்டிய வசதியை வழங்கத் தவறியதால் மக்களுக்கு ஏற்பட்ட நஷ்டத்துக்கு—

தகுந்த நிவாரணம் வழங்க வேண்டிய அரசு, அதை விடுத்து பாதிக்கப்பட்ட அந்த மக்களிடமிருந்து நிலுவை என்ற பெயரில் பணத்தை அறவிட்டு அவர்களை மேலும் நஷ்டமடைய வைக்கப்போகிறது. இது கண்டிக்கத்தக்கதாகும்.

1990 இற்கு முன்னர் இடம்பெற்ற சட்ட விரோத மின்பாவனை, இந்திய அமைதிப் படையினரால் உபயோகிக்கப்பட்ட மின்சாரம், படை நடவடிக்கைகளினால் மின்பாவனைப் பதிவுகள் தொலைந்தமை போன்றவற்றால் யாழ். மாவட்ட உள்ளூராட்சிச் சபைகளால் அறவிட முடியாமல் போன தொகை சுமார் பதினைந்து கோடி ரூபாவுக்கு அதிகம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தொகையை அறவிட முடியாத நிலை இருப்பதால் தாங்கள் இலங்கை மின்சார சபைக்கு அதனை செலுத்த முடியாது என்று யாழ். மாவட்ட உள்ளூராட்சி அமைப்புகளின் சார்பில் அரசின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

அரசின் கவனத்துக்கு இதனைக் கொண்டு வந்த உள்ளூராட்சி அமைப்பினர்—

மின்சார விநியோகத்தை மேற்கொள்ளாததால் மக்களுக்கு ஏற்பட்ட கஷ்டத்தை— நஷ்டத்தை — அரசுக்கு விளக்கி, அவர்களிடம் நிலுவைகளை அறவிடுவதைத் தவிர்க்கும்படி அரசை வற்புறுத்தி, மக்களிடம் மின் கட்டண நிலுவையை அறவிடாமல் விடுவதால் உள்ளூராட்சி சபைகளுக்கு ஏற்படும் நஷ்டத்தை அரசே ஈடு செய்ய வேண்டும் என அரசைக் கோர முடியாதா?

அப்படிக் கோரினால் —

தெற்கு விவசாயிகளுக்கு கொடுத்த கடனையே தள்ளுபடி செய்த புதிய அரசு, வடக்கில் பாதிக்கப்பட்ட மக்கள் விடயத்தில் என்ன செய்யப் போகிறது என்பதை அறிய வாய்ப்பு ஏற்படுமல்லவா?

# ஜனாதிபதித் தேர்தலில் சந்திரிகா அமோக வெற்றி பெற
# சிறுபான்மை மக்களின் வாக்குகளைக் கவர வேண்டும்

## இவ் வாரம் நடக்கும் ஆரம்பப் பேச்சில் உருப்படியான சீட்டுப் போடுவாரா?

## தொண்டமானை வசப்படுத்துவதற்கு காமினி திஸநாயக்கா வலைகிறார்!

ஸ்ரீலங்காவின் புதிய நிறைவேற்று ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் சரியாக இன்னும் ஒரு மாத காலத்தில் நடைபெறப்போகிறது. தேர்தலுக்கான வேட்பாளர் நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்டு விட்டன.

மொத்தம் ஆறுபேர் தேர்தல் களத்தில் குதித்துள்ளார்கள். பிரதமர் சந்திரிகா குமாரதுங்காவும், எதிர்க்கட்சித் தலைவர் காமினி திசநாயக்காவும் பிரதான வேட்பாளர்கள். இவர்கள் இருவருக்கும் இடையிலேயே போட்டி நில



சந்திரிகா

வும். ஏனைய நால்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டோம் என்ற ஒரு ''தகுதியை'' தேடிக் கொள்வதற்காகவே களத்தில் குதித்திருக்கிறார்கள் எனலாம்.

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களாள ஏ. ஜே. ரணசிங்காவும், ஹட்சன் சமரசிங்கவும் போட்டியிடுகின்றனர்.

இவர்களில் முதலாமவர் தகவல் ஒலிபரப்புத்துறை ராஜாங்க அமைச்சராக இருந்தவர், முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் நெருங்கிய ஆதரவாளராக இருந்தவர். ஆனால் பிரேமதாசா இறந்தபின்னர் அவர் புரிந்த தவறுகள் குறித்தும், தில்லுமுல்லுகள், சர்வாதிகாரத்தனம் குறித்தும் வெளிப்படையாகப் பேசிவந்தவர்.

விஜேதுங்கா பதவிக்கு வந்த பின்னர் ஐக்கியதேசியக் கட்சி அரசின் நடவடிக்கைகளைக் கண்டித்தவர். விஜேதுங்காவின் தலைமைத்துவத்தினாலேயே கட்சி பொதுத் தேர்தலில் தோல்வி அடைந்தது என்றும்கட்சிக்குள் பல பிரிவுகளைத் தோற்றுவித்தவர் அவரேஎன்றும் அடிக்கடி சாடுபவர்.

காமினி திசநாயக்காவை மீண்டும் ஐ. தே. கட்சியில் சேர்த்துக் கொண்டதை எதிர்த்தவர்களில் ஏ. ஜே. ரணசிங்காவும் ஒருவர். அதனால் காமினிக்கு எதிராகப் போட்டியிட வேண்டும் என்ற ஒருவித வன்மத்துடன் தேர்தல் களத்தில் குதித்திருக்கிறார்கள் எனினும் காமினிக்கு கிடைக்கக்கூடிய ஒருசில ஆயிரம் வாக்குகளை மட்டுமே இவரால் தட்டிப்பறிக்க முடியும்.

இரண்டாமவரான ஹட்சன் சமரசிங்கா, ஒலிபரப்புத் துறையில் நீண்டகால அனுபவம் உள்ளவர். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளராக பல வருடங்களும், தலைவராகச் சில வருடங்களும் பணி புரிந்தவர். பிரேமதாசாவின் ஆதரவாளர். முன்னாள் அமைச்சர் சிறிசேன கூரே போலவே பிரேமதாசாவின் அபிமானத்துக்கு உரியவராகத் திகழ்ந்தவர். அவருக்கு வேண்டிய பல நடவடிக்கைகள், செயற்பாடுகளில் நிரம்பவும் ஒத்துழைத்தவர்.

எனினும் இவராலும், காமினிக்குக் கிடைக்கக்கூடிய ஐக்கிய தேசியக் கட்சி வாக்குகளில் ஒரு சதவிதத்தின் தசமத்தையேனும் பறிக்க முடியுமோ என்பது சந்தேகமே!

பிரேமதாசாவின் மனைவி ஹேமாவும், மகன் சஜித்தும் ஐ.தே.கட்சியின் வேட்பாளர் காமினி திசநாயக்காவுக்குச் சார்பாக வேலை செய்ய இணங்கியுள்ளதால் பிரேமதாஸாவின் ஆதரவு வாக்குகள் காமினிக்குக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### பிரேமதாசாவிடம் மண்டியிடும் காமினி!

ஓகஸ்டில் நடந்து முடிந்த பொதுத் தேர்தலில், ஐ.தே.க. பிரேமதாசாவின் பெயரை முதன்மைப்படுத்தத் தவறியதால் உண்டான பாதிப்பை காமினி நன்றாக உணர்ந்திருக்கிறார். விஜேயதுங்கா அரசு விட்ட தவறை தான் சரிக்கட்டப் பார்க்கிறார். அதனால் இரண்டு வருடங்களுக்கு முன்னர் பிரேமதாசா உயிருடன் இருந்த போது பிறப்பால் விரோதியாகக் கருதி அவரைக் கண்டவாறெல்லாம் தூற்றியும் கண்டித்தும் திரிந்த காமினி, இப்போது அவரின் சிலைக்கு மாலை மரியாதை செய்து அஞ்சலி செலுத்துகிறார் என்றால் அது தான் அரசியல்!

பிரேமதாசா ஆதரவாளர்களின் வாக்குகளைப் பெறுவதற்காக, அவரின் சிலைக்கு முன்னால் காமினி மண்டியிட்டிருக்கிறார்; மன்றாடியிருக்கிறார்; பாவ மன்னிப்புக் கேட்டிருக்கிறார்! அரசியலில் பகைவன் நண்பன் என்பதெல்லாம் தற்காலிகமானதும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றதுமே.

உயிருடன் இருக்கும் போதே அப்படியென்றால் எதிரி இறந்த பின்னர் அவனை நண்பனாகக் காட்டி மாலை போட்டு வாக்கு வாங்குவதில் என்ன தப்பு? இது புதுமையும் அல்லவே!

கடந்த பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு 44.04 சதவீத வாக்குகள் கிடைத்தன. பிரேமதாசா ஆதரவு வாக்குகளை முற்றாகத் திரட்ட முடிந்தால் வெற்றிக் கோட்டை எட்டிப் பிடிக்கலாம் என்று காமினி நம்புகிறார். மலையகத்தில் தொண்டமான் மூலம் கிடைக்கும் வாக்குகளை இழக்காமல் இருக்க வேண்டும், என்பதிலும் காமினி தீவிரமாகக் கவனம் செலுத்துகிறார்.

ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்பது என்பதனை முடிவு செய்யும் அதிகாரத்தை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தேசிய சபை தொண்டமானிடமே ஒப்படைத்திருக்கிறது. அதனால் அவரைத் தனது பக்கம் வசமாக்கி, வளைத்து, அணைத்துக் கொள்ள காமினி இயன்றளவு பாடுபடுவார்.

விஜேதுங்கா தலைமைக்கும் தமது தலைமைக்கும் இடையே நிறைந்த வித்தியாசம் இருக்கும் என்றும், மலையக மக்களின் நலன்களை

**அரசியல்**

அதிக அளவில் கவனிப்பதாகவும் ஓர் ஒப்பந்தத்தைச் செய்தேனும் தொண்டமானைத் தனது பக்கம் சாய்த்துக் கொள்ளலாம் என்ற நம்பிக்கை அவருக்கு உண்டு. அது பெருமளவில் சாத்தியமாகக் கூடும். இந்த வாரத்தில் அந்த முடிவு தெரிந்துவிடும்!

### வெடிப்புகளை ஒட்டுகிறார்

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் நிலவும் உட்கட்சிப் பூசல்களை, வெடிப்புகளை ஒட்டிப் பூசுவதிலும் காமினி ஓரளவு வெற்றி கண்டுள்ளார். பிரதமராக இருந்த ரணிலை கீழே தள்ளி விட்டு கட்சியின் தலைமைத்துவத்துக்கு ஏறிச் சென்றுள்ள காமினி, இப்போது அவரையும் தனது நண்பனாக்கிக் கொண்டுள்ளார். அதனால் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி அடையும் வாய்ப்புத் தமக்கு உண்டு என்ற நம்பிக்கையுடனும் இருக்கிறார்.

நியமனப் பத்திரம் தாக்கல் செய்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய போது தனது வெற்றி நிச்சயமானது என்று அறுதியிட்டுக் கூறியிருக்கிறார். காமினி திசநாயக்கா தாம் ஜனாதிபதியாக வந்து நாட்டை 21 ஆம் நூற்றாண்டின் நவீன யுகத்துக்கு இட்டுச் செல்லப் போவதாகவும் உறுதியுமளித்திருக்கிறார்.

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி தமக்கே என்று காமினி சொன்னதுபோலவே, பிரதமர் சந்திரிகாவும் வெற்றிக்கனி தன்னுடையதே என்று அடித்துச் சொல்கிறார். இந்த நாட்டை உண்மையான ஜனநாயக நாடாக மாற்றுவதற்குத் தாம் ஆரம்பித்த பயணத்தைத் தொடரப் போவதாக சந்திரிகா சொன்னார்.

நியமனப் பத்திரங்களைத் தாக்கல் செய்த பின்னர், ''எனது வெற்றி குறித்து என்ன சந்தேகம்?'' என்று சிரித்துக் கொண்டே மகிழ்ச்சியுடன் பத்திரிகையாளரிடம் கேட்டார் சந்திரிகா! தனது வெற்றியில் அவர் அதீத நம்பிக்கை உள்ளவராகவே



காமினி

காணப்படுகிறார்.

தென்னிலங்கையில் உண்டான சந்திரிகா அலையினால் அவர் பொதுத்தேர்தலில் வெல்ல முடிந்தது உண்மையே எனினும் அப்போதும் அமோக ஆதரவு பெறமுடியவில்லை. அந்த ஆதரவைப் பெருக்கிக் கொள்வதற்கு போதிய காலம் கிடைப்பதற்கு முன்னரே ஜனாதிபதித் தேர்தல் வந்துவிட்டது. தமது ஆட்சியை நிலைநிறுத்தும், பலப்படுத்தும், உறுதிப்படுத்தும் நோக்கத்துடனேயே முன்னர் நடத்தப் போவதில்லை என்று கூறிய ஜனாதிபதித் தேர்தலை அரசாங்கம் நடத்த முனைந்திருக்கிறது.

கடந்த பொதுத் தேர்தலில் பெற்ற ஆதரவை விட, மேலதிக வாக்குகளைப் பெறுவதற்கு ஏற்ற வகையில் மக்களுக்கும் பெரிதாக எதனையும் செய்வதற்கு அரசாங்கத்

**உதயகாந்தன்**

துக்குக் காலம் போதவில்லை. நிதி வளமும் இருக்கவில்லை. சந்திரிகா நினைத்தது போல பெரிய மாற்றங்களையும் கொண்டுவர முடியவில்லை. ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கத்தின் குறைபாடுகளை வெளிச்சம் போட்டுக் காட்டுவதில் கடமையாகச் செயலாற்றி முடிக்கவில்லை, முந்திய அரசின் மக்கள் விரோத, ஜனநாயக விரோதச் செயல்களைச் சொற்ப அளவிலேயே வெளிக்காட்ட முடிந்தது.

### கூடுதல் வாக்கு பெறுவது கடினம்

ஆகையால் பொதுத்தேர்தலில் அரசு பெற்ற வாக்குகளைவிட, சிங்கள மக்களிடம் மேலதிக வாக்குகளைச் சந்திரிகா பெறுவது என்பது சற்றுக் கடினமானதே. இத்தகைய ஒரு நிலையில் சந்திரிகா தமிழர், முஸ்லிம்களின் வாக்குகளையே தமது வெற்றிக்குப் பலம் சேர்க்க வேண்டிய தேவை உண்டு.

இதனைச் சந்திரிகாவும் நன்றாக உணர்ந்திருக்கிறார். அதனாலேயே அவர் கொழும்பில் தமிழ்க்கட்சிகளின் ஆதரவை நாடியிருக்கிறார். இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பது என்ற தனது நிலைப்பாடு, தமிழ் முஸ்லிம் மக்களின் ஆதரவை பெறுவதற்கு உதவும் என்று அவர் எதிர்பார்க்கிறார் போலும்.

இனப்பிரச்சினை விடயத்தில் முந்திய அரசைவிட சந்திரிகாவின் போக்கு வித்தியாசமானதாக இருப்பதால் அவர் தமிழ், சிங்கள மக்களின் அபிமானத்தைப் பெற்றிருக்கிறார் என்பது ஏதோ உண்மை தான்.

எனினும் இதுவிடயத்திலும் சந்திரிகாவினால் பெரிய அளவில் முன்னேற முடியவில்லை. வடபகுதி மீது விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடையை ஓரளவு தளர்த்தியதோடு மட்டுமே சந்திரிகாவால் இதுவரை அடி எடுத்து வைக்க முடிந்தது.

### மட்டுப்படுத்தப்பட்ட வாய்ப்பு

தடை நீக்கம் செய்யப்பட்ட பொருள்கள் தாராளமாக வடக்கே வந்து சேர்வதற்கு தரைப்பாதை ஒன்றைத் திறந்துவிட இதுவரை முடியவில்லை! குறிப்பாகச் சொல்வதானால் பொருளாதாரத் தடையை நீக்கிய கையோடு பூநகரி—சங்குப்பிட்டிப் பாதையைத் திறந்துவிட முடியவில்லை. அதாவது தமிழர் விவகாரத்தில் அவருக்குள்ள சாதகநிலை அல்லது வாய்ப்பு மட்டுப்படுத்தப்பட்டதாகவே உள்ளதை அவதானிக்கலாம்.

அரசாங்கத்தைவிட மேலோங்கி நிற்கும் இராணுவத்தை ''உறுக்கி—அடக்கி'' வைத்து தான் நினைத்தவாறு செயற்பட முடியாத சங்கட நிலை, கஷ்ட நிலை சந்திரிகாவுக்கு உண்டு. அதனாலேயே விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தை நடத்தும் முயற்சியிலும் வேகமாகச் செயற்படாமல் மெதுமெதுவாக, அடிமேல் அடி எடுத்து வைக்க வேண்டிய நிர்ப்பந்தம் உண்டாகியிருப்பதைக் காணமுடிகிறது.

பேச்சுவார்த்தைக்கு உகந்த சூழ்நிலையை உருவாக்கக் கூடியதாக போர் நிறுத்தம் செய்யுமாறு படையினருக்கு உத்தரவிடக் கூடிய பலம் சந்திரிகாவிடம் இல்லை.

இதனால், போர் நிறுத்தம் செய்வதற்கு வல்லமை இல்லாத சந்திரிகா, மிகமிகச் சிக்கலான இனப்பிரச்சினையை எவ்வாறு தீர்த்துவைப்பார்; அதற்குரிய பலம் அவருக்கு எங்கிருந்து வரப்போகின்றது என்ற கேள்வி எழுகிறது. இந்தக் கேள்வி சந்திரிகா மீது சிறுபான்மையினர் வைக்கக் கூடிய நம்பிக்கையைப் பெருமளவில் குறைக்கவே உதவும்.

இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணவேண்டும்; போரை நிறுத்த வேண்டும் என்பதே சிங்கள மக்களின் விருப்பமாக இருந்த போதிலும், பொதுத் தேர்தலில் அதனை அவர்கள் சந்தேகத்துக்கு இடமின்றி எடுத்துக் கூறியபோதிலும்—

அந்த அரசியல் தீர்வு எவ்வாறு அமைய வேண்டும் என்பதனை சிங்கள மக்கள் தெரிவிக்கவில்லை. அதற்கு ஒரு விதத்தில் சந்திரிகாவும், அவரது பொ. ஐ. முன்னணியும் காரணம் என்றுசொல்லலாம். பொதுத்தேர்தலின் போது, இனப்பிரச்சினைக்கான திட்டவட்டமான தனது தீர்வு எது என்பதை பொ. ஐ. மு. தனது தேர்தல் அறிக்கையில் சிங்கள மக்களுக்குத் தெரிவிக்கவில்லை.

பொ.ஐ. முன்னணியின் அந்தத்தவறை, நழுவல் நிலையைப் பயன்படுத்தி, பேரினவாத சக்திகள் இனப்பிரச்சினைக்கு சந்திரிகா தீர்வு காண்பதைத் தடுக்க வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது எனலாம். இந்தத் தவறைப் பற்றிக் கொண்டு இராணுவமும் அரசியல் தீர்வுக்கு முட்டுக்கட்டை போடுவதற்கும் பெரும் வாய்ப்புண்டு.

### இராணுவத்தின் கடும் போக்கு

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணவேண்டும் என்பதனை இராணுவத்தில் உள்ள ஒரு சாரார் விரும்புகின்றனர். ஆனால் இன்னொரு சாரார் அதனை ஆதரிக்கவில்லை. அரசியல் தீர்வு காண்பது என்ற பெயரில் படையினரின் மனோபலத்தை குறைத்துவிட அனுமதிக்க முடியாது என்ற கடும்போக்குடையவர்களாக அவர்கள் காணபடுகிறார்கள். அவர்களே பூநகரிப் பாதை திறப்பதையும், போர் நிறுத்தத்தையும் தடுத்து வருகின்றனர்.

ஜனாதிபதி தேர்தலில் சந்திரிகா வெற்றி பெற்றாலும் கூட, இப்போது இல்லாத அதிகாரம் அவர் கைக்கு வந்தாலும்கூட, பாதுகாப்புப் படைகள் அவரின் பணிப்பின் கீழ் வந்தாலும் கூட, இந்தக் கடும்போக்கு இராணுவத் தரப்பினரை அடக்கி வைக்க முடியுமா என்பது கேள்விக்குரியது தான்!

இனப் பிரச்சினையைத் தீர்த்து வைக்க வேண்டும் என்ற தனது விருப்பத்தை சந்திரிகா நிறைவேற்ற வேண்டுமானால், தீர்வு இது தான் என்று மக்களிடமிருந்து ஆணை பெறுவதே உகந்த மார்க்கம். அவ்வாறு அனுமதி பெற்றுவிட்டால் இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அவருக்கு ஆதாரத் துணையாகிவிடும். ஜனாதிபதித் தேர்தல் அதற்குரிய நல்ல சந்தர்ப்பத்தைக் கொடுக்கிறது.

ஆனால் இனப்பிரச்சினைக்குத் தாம் உத்தேசித்துள்ள தீர்வு எது என்பதனை சந்திரிகா தமது ஜனாதிபதித் தேர்தல் கொள்கைகளில் சேர்த்துக் கொண்டால் —

காமினி அதனைத் தனக்கு வெற்றிக்குரிய சீட்டாக்கிக் கொண்டு சிம்மாசனத்தைப் பிடித்து விடுவார். சந்திரிகா பிள்ளையார் பிடிக்கப் போய் பெருங் குரங்கை உருவாக்கியதாக முடியும்!

### மெல்லவும் முடியாது விழுங்கவும் முடியாது

இனப் பிரச்சினைக்கு உரிய தீர்வு என்ன என்று கூறாமல் தேர்தலில் வடக்கு - கிழக்கு வாழ் தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற முடியும் என்றும் அவர் எதிர்பார்க்க முடியாது.

இது மெல்லவும் முடியாத விழுங்கவும் முடியாத நிலை தான்!

எனவே —

விடுதலைப் புலிகளுடன் இவ்வாரத்தில் — இன்னும் நான்கு நாட்களில் — நடத்தும் ஆரம்பச் சமாதானப் பேச்சுக்களின் மூலம் தனக்குச் சாதகமான ஓர் அம்சத்தையேனும் முன்னெடுக்க வேண்டிய தேவை சந்திரிகாவுக்கு உண்டு.

முதற்கட்டப் பேச்சில் தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் குறித்தே ஆராயப்பட உள்ளது. அப்போது தனக்கு வாய்ப்பான தமிழர்களின் ஆதரவைப் பெறக்கூடிய—வடக்குத் தமிழருக்கு நலன் செய்வதன் மூலம் ஏனைய பகுதிகளில் உள்ள தமிழர்களின வாக்குகளைக் கவரக்கூடிய — சீட்டு ஒன்றை பேச்சு மேசையில் சந்திரிகா (அவரின் பிரதிநிதிகள்) எடுத்துப் போட வேண்டும்!

தமிழர்களின் வாக்குகளை வாங்கும் நோக்கத்துடன் அவர் செயற்பட வேண்டி உள்ளதால், ஆரம்பப் பேச்சானாலும் ஆக்க பூர்வமான ஒரு நிலைப்பாட்டை தோற்றுவிப்பார் என்று எதிர்பார்க்கலாமா?

★

# முதியோர் மனநிறைவோடு வாழ உதவுவது எமது கட்டாய கடமை

*சர்வதேச முதியோர் வாரத்தையொட்டி இந்தக் கட்டுரை பிரசுரமாகிறது.*

நாம் முதியோர் வாரத்தை இப்போது கொண்டாடுகின்றோம். நாம் முதியோருக்கு விழா எடுத்தால் மட்டும் போதாது. அவர்களின் வயோதிப காலத்தில் அவர்களுக்கு அன்புகாட்டி அவர்கள் தேவைகளை நிறைவு செய்வது எமது கடமையும் உரிமையுமாகும்,

இன்றைய முதியவர்கள் ஒரு காலத்தில் நம்மைப்போல் இளைஞர்களாக வாழ்ந்தவர்கள், எனவே இளைஞர்களாகிய நாம் முதியோரை எங்களிடமிருந்து பிரிந்துவிடாமல் அவர்களை நேசித்து அவர்களின் அனுபவம் நிறைந்த ஆலோசனைகளைக் கேட்டு அதன் படி நடக்க முன்வர வேண்டும்.

இன்றைய இளைஞர்கள் நாளைய வயோதிபர்கள். எனவே நாம் மற்றவர்களிடம் இருந்து எதிர்பார்க்கும் மதிப்பையும், மரியாதையையும், உதவிகளையும் நாமும் முதியோருக்குச் செய்யக் கடமைப்பட்டுள்ளோம்,

### மெழுகுவர்த்திகள்

எமது பெற்றோர் எம்மைப் பெற்று வளர்த்து படிக்க வைத்து, திருமணம் செய்து வைத்து தமது கடமையைச் செய்துள்ளார்கள் அத்துடன் நாம் சந்தோஷமாகவும் சமாதானமாகவும் வாழவேண்டும் என்று விரும்புகிறார்கள். தம்மை மெழுகுவர்த்திபோல் உருக்கி தம்மை ஒறுத்து தம் பிள்ளைகளுக்காக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

எனவேதான் எமது பெற்றோரின் வயோதிபகாலத்தில் அவர்களை மனம் வருந்த வைக்காது அவர்களுக்கு நாம் செய்யவேண்டிய கடமைகளைச் செய்யவேண்டும்.

ஒரு தகப்பன் பத்துப் பிள்ளைகளை வைத்து காப்பாற்றுகிறான். ஆனால் அந்தப் பத்து பிள்ளைகளும் சேர்ந்துஒரு வயோதிப தகப்பனை, தாயை காப்பாற்ற முடிவதில்லை. தாய், தகப்பனை அனாதையாக அகதிகள் போல்வாழ விட்டு விடுகிறார்

**எஸ். என். அரசு**
(சாவகச்சேரி)

கள். இன்றைய நாட்டின் நிலைமையைக் காரணம் காட்டி பிள்ளைகள் அனைவரும்வெளிநாடு சென்று உல்லாசமாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்

### பட்டினிகிடக்கும் பெற்றோர்

அதே நேரம் வயோதிபப் பெற்றோர் இங்கே உணவு தயாரித்து உண்ணமுடியாத நிலையில் பட்டினிகிடக்கிறார்கள் நோயினால் துன்பபடுகிறார்கள்.ஒருபிள்ளையாவது பெற்றோருடன் இருந்தால் அவர்கள் மகிழ்ச்சியாகவும் மனநிறைவோடும் வாழமுடியும்.

இன்று அநேகமாக வசதியுள்ள பெற்றோர் பலர் வயோதிபர் இல்லங்களில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.அவர்களிடம் ஏன் ஐயா உங்களுக்குப் பிள்ளைகள் இல்லையா, உங்களைக்காப்பாற்ற உறவினர் இல்லையா என்று கேட்டால் நாங்கள் எங்கள் பிள்ளைகளுடன் வாழ்வதைவிட இந்த வயோதிப இல்லத்தில் ஓரளவு மனநிறைவுடன் வாழ்ந்துகொண்டிருக்கிறோம் என்று அழாக்குறையாக கூறுவார்கள்.

இதிலிருந்து நாம் முதியோரை எப்படி நடத்துகிறோம் என்பது சொல்லாமலே விளங்கும்.

### ''கண்டதே காட்சி கொண்டதே கோலம்''

முற்காலத்துப் பிள்ளைகள் திருமணமான பின்பு கூட தமது பெற்றோரின் சொற்படி அறிவுரையின்படி நடந்து துன்பமின்றி இன்பமாக வாழ்ந்தார்கள். ஆனால் இன்று பெற்றோரின் அறிவுரையை மாத்திரமல்லாமல் முதியோரின் அறிவுரைகளையும் கேட்டு நடக்க விரும்புவதில்லை. தாம் கண்டதே காட்சி கொண்டதே கோலம். எல்லாம் எமக்கு விளங்கும் தெரியும் என நினைக்கிறார்கள். முதியோர் வாழ்ந்து கெட்டவர்கள் இவர்களிடம் என்ன கேட்பது என்று கூறு

(8ஆம் பக்கம் பார்க்க)

சூரியகாந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி இரத்தினசிங்கம் மகேஸ்வரி

பெரிய தோட்டம், கரவெட்டியைச் சேர்ந்த மகேஸ்வரி 08 - 10 - 1994 இல் காலமானார்.

இவர் இரத்தினசிங்கத்தின் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) அன்பு மனைவியும், ஆழ்வாப்பிள்ளை, சின்னப்பிள்ளை ஆகியோரின்சகோதரியும், சிவபாலன் (உதவி பரிசோதகர், நெல் ஆராய்ச்சி நிலையம், பரந்தன்), சுலோஜினி (அவுஸ்திரேலியா) இவர்களின் தாயாரும், திலகநாதன் (பொறியியலாளர், அவுஸ்திரேலியா), சாந்தினி ஆகியோரின் மாமியாரும், அனுசா, டனன், சிந்துஜா (அவுஸ்திரேலியா) ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (09 - 10 - 1994) காலை 10-00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக சோனப்பு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சி. வேலாயுதம்
(மைத்துனர்)

பெரிய தோட்டம்,
கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி.

[33253]

## சின்னத்தம்பி நவரட்ணம்

(Rtd. Chief Computer Engineer, British Airways U.K)

வட்டுக்கோட்டையை பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும்கொண்ட சின்னத்தம்பி நவரட்ணம் காலமானர்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி - செல்லம்மாவின் அன்பு மகனும், அம்பலவாணர் (இளைப்பாறிய புகையிரதநிலைய அதிபர்), காலஞ்சென்ற அன்னலட்சுமி இராஜபிள்ளை, தேவராஜா ஆகியோரின் அன்பு சகோதரனும், காலஞ்சென்ற ஜோசபின், Dr. வெ. இராஜபிள்ளை அவர்களின் மைத்துனரும், Dr. அகிலன், Dr. பரதன், வைதேகி (ஆங்கில போதனாசிரியர், யாழ். பல்கலைக் கழகம்) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வைதேகி இராஜபிள்ளை

வட்டு தென்மேற்கு,
10, ஆலோலை வீதி,
வட்டுக்கோட்டை.

(33258)

## திருமதி இராசம்மா சேனாதிராசா

இமையாணன், உடுப்பிட்டியைச் சேர்ந்த திருமதி இராசம்மா சேனாதிராசா அவர்கள் 08 - 10 - 94 சனிக்கிழமையன்று காலமானார்.

அன்னார் அமரர் சரவணமுத்து சேனாதிராசா (ஓய்வுபெற்ற நீர்ப்பாசன இலாகா லிகிதர்) அவர்களின் அன்பு மனைவியும், திரு. இ. சுப்பிரமணியம் (ஓய்வு பெற்ற தொழில் நீதிமன்றத் தலைவர், அவுஸ்திரேலியா), திரு. இ. ஆறுமுகசாமி (ஓய்வுபெற்ற பிரதம கணக்காளர், உணவுத் திணைக்களம்) ஆகியோரின் அருமைச் சகோதரியும், திருமதி கு. சத்தியலட்சுமி (ஆசிரியை, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), திரு. இரவீந்திரநாதன், திரு. இராஜதிலகம் (ஓய்வுபெற்ற நீர்ப்பாசன இலாகா தொழில்நுட்ப அதிகாரி), திரு. சுரேந்திரநாதன் (நீர்ப்பாசன இலாகா, வவுனிக்குளம்), திருமதி க. ஜெயலட்சுமி (ஆசிரியை, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி) ஆகியோரின் அருமைத் தாயாரும், திரு. க. குமாரசுப்பிரமணியம் (மாகாண சபை, திருகோணமலை), திருமதி இ. பராசக்தி, திருமதி இ. கனலட்சுமி ஆசிரியை, அச்சுவேலி புனித திரேசா வித்தியாலயம்), திருமதி சு. மங்கையர்க்கரசி, திரு. பொ. கந்தசாமி (முன்னாள் ஆசிரியர், உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி), குமுதினி, முகுந்தன், வாஹினி, மாதினி, ஜனனி, துஷ்யந்தன் ஆகியோரின் அன்பு மாமியாரும், த. பவஹாரிணி (நுண்கலைப்பீட மாணவி), த. நாதஸ்வரூபிணி, த. வித்தியானந்தி, இ. சியாமசுந்தரன், இ. தாரிணி, இ. பாமினி, இ. அபிராமி க. சேயோன், சு. கோசலைகோபன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

ஈமச்சடங்குகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். உறவினர்கள், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்குமாறு வேண்டப்படுகின்றனர்.

தகவல்:
சே. இரவிந்திரநாதன்
(மகன்)

'சத்தியவாசா'
இமையாணன்,
உடுப்பிட்டி.

(33257)

## நாகன் வயிரி

வறுத்தலைவிளான், தெல்லிப்பழையை வசிப்பிடமாகவும், தற்போது பிள்ளையார் கோயிலடி மயிலங்காடு எனும் இடத்தில் வசித்து வந்தவருமாகிய நாகன் - வயிரி 7. 10. 94 அன்று இறைவனடி சேர்ந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நாகனின் அன்பு மனைவியும், கணேசன் (தலைவர், தெல். ப. தெ. வ. அ. கூ. சங்கம்), அருமை, நாகராணி, மந்திரி, செல்லன், சிவசம்பு, சத்திலிங்கம், மகாலிங்கம், ஆகியோரின் அன்புத் தாயாரும், கந்தையா, கிருஷ்ணகுமாரி, திருமதி மகாலிங்கம், அருந்தவமலர், செல்லம்மா, திருமதி சத்திலிங்கம் ஆகியோரின் அன்பு மாமியும், கமலகாந்தன், தனபாலசிங்கம், கமலதாஸ், கமலரூபன், பிரதிசா, பிரமிளா, தர்சினி, கஜீபன், பானுரேகா, உதயமாலா, கமலநாதன் [பணியாளர், கோண். ப. தெ. வ. அ. கூ. சங்கம்], ஜெயசித்திரா, ஜெயவதனி, ஜெகதீசன், ஜெயந்தன், விசியகுமார், பத்மா, சுவர்ணா, யோகினி, கிருபாகரன், சசிகரன், மதன், மாலினி ஆகியோரின் அன்பு பேர்த்தியும், மயூரிகாவின் ஆசைப் பூட்டியுமாவார்,

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பிள்ளையார் கோயிலடி, மயிலங்காட்டில் உள்ள மகனின் இல்லத்தில் நடைபெற்று சுன்னாகம் கொத்தியாலடி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
நா. கணேசன்
(மகன்)

(7668)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 09 - 10 - 1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# மாற்றமடையும் உலகத்துக்கு....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

குஷில் குணசேகர, முன்னாள் பதில் தலைவர் றோட்டேறியன் ஜானக எதிரிசிங்க, தமிழீழக் கல்விப் பொறுப்பாளர் திரு. வெ. இளங்குமரன், யாழ். இந்துக் கல்லூரி அதிபர் திரு. ஏ. பஞ்சலிங்கம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொண்டனர்.

திரு. சுரேஷ் மெல்வானி தமது உரையில் மேலும் கூறியதாவது:—

யாழ்ப்பாணம் றோட்டறிக் கழகமும் றோட்டராக்ட், இன்ரறக்ட் கழகங்களும் ஆசியாவில் மிகச் சிறந்த கழகங்களில் அடங்கும். இதை நான் சர்வதேச றோட்டறிக்கழகத்துக்கு சிபார்சு செய்வேன்.

யாழ். றோட்டறிக் கழகத்தினதும், இன்ரறக்ட், றோட்டராக் கழகங்களினதும் செயற்பாடுகளை நேரில் கண்டறியக்கூடிய வாய்ப்புகளை ஏற்படுத்தியமைக்கு நன்றி தெரிவிக்கவேண்டும்.

### தலைவர்களின் கடமை

சங்கங்கள் கழகங்களைவிட அவற்றில் அங்கத்துவம் வகிக்கும் ஒவ்வொரு உறுப்பினரும் பெரியவர் என்பதை ஞாபகத்தில் வைத்திருக்கவேண்டும்.

அடுத்தவர்கள் தமது இலக்குகளை அடையத் தலைவர்கள் உதவவேண்டும். தலைவர்களே எல்லா அலுவல்களையும் செய்து கொண்டிருக்கக்கூடாது. மற்றவர்களைக் கொண்டு செய்வித்து இலக்கை அடைவதே தலைமைத்துவத்தின் சிறப்பு— என்றார்.

யாழ். றோட்டறிக் கழகத் தலைவர் திரு. ச. சரவணபவன் தமது தலைமை உரையில் கூறியதாவது:

சரித்திரத்தில் முதல் தடவையாக இன்ரறக்ட் கழக உறுப்பினர்களின் மாநாடு யாழ்ப்பாணத்தில் நடைபெறுகிறது. றோட்டறிக்கழக உறுப்பினர்களுக்கு இது பெரிதும் உற்சாகம் தருகிறது. கொழும்பிலிருந்து சிறப்பு விருந்தினர்களாகறோட்டேறியன் சுரேஷ் மெல்வானி, றோட்டேறியன் குஷில் குணசேகர, றோட்டேறியன் ஜானக எதிரிசிங்க ஆகியோர் வந்திருப்பதும் எமக்கு உற்சாகம் தரும் நிகழ்ச்சியாகும். அவர்கள் எம்மக்கள் படும் இன்னல்களைக் கண்கூடாக நேரில் காண்பார்கள் என நம்புகிறேன்.

### நலிந்தவர்களுக்கு உதவுவோம்

சமூக சேவையில் நாட்டம் கொண்டவர்களை இன்ரறக்ட் கழகங்கள் வளர்க்க வேண்டும். எமது மத்தியில் உள்ள நலிந்த பகுதியினரை அணைத்துக் கொண்டு அவர்களுக்கு உதவ வேண்டும் என்ற மனப்பாங்கு வளர வேண்டும்.

உலகத்தின் பார்வை விரிந்து செல்கிறது. அதற்கேற்ப புரிந்துணர்வுப் பாலத்தைக் கட்டி எழுப்புவதே எமது நோக்கமாக இருக்க வேண்டும் என்றார்.

இந்துக் கல்லூரி அதிபர் றோட்டேரியன் ஏ. பஞ்சலிங்கம், யாழ். பல்கலைக்கழகப் பதிவாளர் திரு. கே. பரமேஸ்வரன், தமிழீழக் கல்விப் பொறுப்பாளர் திரு. வெ. இளங்குமரன் ஆகியோர் வாழ்த்துரைகளை வழங்கினர்.

### குதூகல வரவேற்பு

வைபவத்தின் ஆரம்பத்தில் றோட்டேறியன் சுரேஷ் மெல்வானி உட்பட றோட்டறிக் கழகப் பிரமுகர்கள் யாழ். இந்துக் கல்லூரி மாணவர்களின் பான்ட் வாத்தியக் கோஷ்டியைத் தொடர்ந்து வைபவ மண்டபத்திற்கு வந்தபோது வரும் வழியில் இரு மருங்கிலும் இன்ரறக்ட் கழக, றோட்டரக்ட் கழக, உறுப்பினர்கள் வரிசையாக நின்று மலர் மாலை அணிவித்து வரவேற்றனர். மண்டப வாசலில் தமிழ்ப் பண்பாட்டு முறையில் ஆராத்தி எடுக்கப்பட்டது.

அங்குரார்ப்பண வைபவத்தில் றோட்டறிக் கழக உறுப்பினர்கள், றோட்டறக்ட், இன்ரறக்ட் கழக உறுப்பினர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரிய ஆலோசகர்கள் முதலிய நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

இளைஞர் சேவைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ரத்னகுமார் வரவேற்புரையையும் றோட்டறிக் கழகச் செயலாளர் திரு. திருநந்தகுமார் நன்றியுரையையும் நிகழ்த்தினார்கள்.

### உயர் விருது

முன்னாள் ஆளுநர் மெல்வானி "போல் ஹரிஸ் பெலோ" ("Paul Harris Fellow") என்ற உயர் றோட்டேறியன் விருதை யாழ். றோட்டறிக் கழகத் தலைவர் றோட்டேறியன் சரவணபவனுக்கும் முன்னாள் தலைவர் றோட்டேறியன் பி. செல்வநாதனுக்கும் இவ்வைபவத்தில் வைத்து வழங்கினார்.

இறுதியில் யாழ். இந்து மகளிர் கல்லூரி இன்ரறக்ட் கழக உறுப்பினர்களின் நாடகம் இடம்பெற்றது. (அ-க)

## முதியோர்...

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

வார்கள்.

முதியோர் தமது வாழ்நாளில் பல அனுபவங்களைப் பெற்றவர்கள். பல வெற்றி தோல்விகளைச் சந்தித்தவர்கள். பல இடையூறுகளைச் சமாளிப்பதற்கு எதிர் நீச்சல் போட்டவர்கள். எனவே நாம் தான் தோன்றித் தனமாக நடந்து அழிவுப் பாதையில் சென்று அழிந்து போகாமல் பெற்றோரை மதித்து முதியோர் சொற்கேட்டு நடப்போமாக. முதியோர் நிறைவான நிம்மதியான வாழ்வு வாழ்ந்து இறைவன் அடி செல்ல எம்மாலான உதவிகளை அவர்களுக்குச் செய்வோமாக.

''மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்''

O/L&YR. 10

விஞ்ஞானம்:
MR. J. R. சூரி
கணிதம்:
MR. தயாளன்
வர்த்தகம்:
MR. எல்விஸ்
SHAMROCK
யாழ். சுண்டுக்குளி.
(33256)

## இன்ரறக்ட்...

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிர்ணயிக்கிறது.

பலதரப்பட்ட சேவைத் திட்டங்களை இன்ரறக்ட் உறுப்பினர்கள் உருவாக்கி நடைமுறைப்படுத்துகின்றார்கள். வலது குறைந்த குழந்தைகள், முதியோர்கள் மற்றும் உதவி தேவைப் படுவோர்களுடன் நேரடியாக இன்ரறக்ட் உறுப்பினர்கள் தொடர்பு கொள்கின்றனர்; இப்பணிகளுக்காக போதியளவு நிதி திரட்டுகின்றனர்.

ஆண்டு தோறும் குறைந்தது இரண்டு சேவைத் திட்டங்களை ஒவ்வொரு இன்ரறக்ட் கழகமும் மேற்கொள்கிறது. பாடசாலை அல்லது சமூகம் மற்றும் சர்வதேச புரிந்துணர்வை முன்னெடுத்துச் செல்வதிலும் இன்ரறக்ட் கழகம் சேவையாற்றுகிறது. சமூகத்தில் வாழ்க்கை சிறந்ததாக அமைவதற்கு தமக்கு ஆதரவளிக்கும் றோட்டறிக் கழகம் செயல்படுத்தும் பல தரப்பட்ட சமூக சேவை நலன் திட்டங்களுக்கும் இன்ரறக்ட் உறுப்பினர்கள் உதவுகின்றனர்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி அன்னம்மா பீதாம்பரம்

அன்னம்மா பீதாம்பரம் நேற்றுக் காலமானார். இவர் பீதாம்பரத்தின் (டற்குணம், யாழ். நூலகம்) அன்பு மனைவியும், கருணாநிதி (சாயி போட்டோ), சிவஅன்பு (நிலஅளவைத் திணைக்களம், கொழும்பு) ஆகியோரின் அன்புத் தாயாரும், கந்தையா, திருமதி யோகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், நாகேஸ்வரியின் அன்பு மாமியாரும், சாயி, சங்கரின் அன்புப் பேர்த்தியாரும், நடராசா, தவநாதன், திருமதி கோ. சிவசக்தி ஆகியோரின் மைத்துனியும், திருமதி நா. சந்திராதேவியின் சகோதரியும், இராசேந்திரன், கௌசி, சிவசக்தி, தர்சினி ஆகியோரின் பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் தகனக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பீ. கருணாநிதி
(மகன்)

சாயி போட்டோ,
1010 / 17, கே. கே. எஸ். வீதி,
நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

(33262)

## கதிர்காமர் திருநாவுக்கரசு

(நாரந்தனை, ஊர்காவற்றுறை)

நாரந்தனையை பிறப்பிடமாகக் கொண்டவரும் தாவடியில் வசித்து வந்தவருமான கதிர்காமர் திருநாவுக்கரசு அவர்கள் 08-10-94 அன்று இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் இராசம்மாவின் அன்புக் கணவரும் அமிர்தலிங்கம், சொர்ணலிங்கம் (கனடா), காலஞ்சென்ற இன்பலிங்கம் (கிராமசேவையாளர்), அமிர்தவதி, சுந்தரலிங்கம் (தலைவர், ப. நோ. கூ. சங்கம், ஊர்காவற்றுறை) ஆகியோரின் அன்புத் தந்தையும், நாகேஸ்வரி, செல்வராணி (கனடா), மகேஸ்வரி, தவராணி ஆகியோரின் மாமனும், கிருபாகரன், பிரபாகரன், சுதாகரன், ஸ்ரீகரன், சதீஸ்கரன், விஜிதா, வினோதன், வித்யா, விந்தியா, விதுர்சன், தர்சிகா, துவாரகா, பிரவீணா, கிருசன், கிருசாந்தன், இலக்சி ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு, சிவசம்பு, திலகவதி (கொழும்பு) ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (9-10-94) பகல் 11 மணியளவில் தாவடி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளிற்காக தாவடி, இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
மக்கள்
தி. அமிர்தலிங்கம்
தி. சுந்தரலிங்கம்
(தலைவர், ப. நோ. கூ. ச. ஊர்காவற்றுறை)

இந்து கோவிலடி,
தாவடித் தெற்கு,
கொக்குவில்.

(33259)

## குவைத்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் புதிதாகக் குவிப்பது குவைத்தை மீண்டும் ஆக்கிரமிக்கும் உள்நோக்கமே என அமெரிக்காவும் அதன் நேச நாடுகளும் அச்சம் வெளியிட்டுள்ளன.

ஈராக் மீண்டும் ஒருமுறை குவைத்தை ஆக்கிரமிக்க அனுமதிக்கமாட்டோம் என நேற்று கூறியிருக்கும் அமெரிக்க அதிபர் பில் கிளின்ரன் வளைகுடாவை நோக்கி அமெரிக்க விமானத் தாங்கிப் போர்க் கப்பலை நகர்த்தி உள்ளார்.

இதற்கிடையில் ஈராக்கின் படைக்குவிப்புக் குறித்து ஐ. நா. பாதுகாப்புச் சபை நேற்று கவலை தெரிவித்துள்ளது. (இ-4)

## தேசிய...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தொகையை ஓய்வூதியமாகப் பெறுபவர்களுக்கும். வாழ்க்கைச் செலவுப் படியை வழங்குவது பற்றி ஆலோசனைக் குழு பரிசீலனை செய்யும்.

ஓய்வூதியம் பெறுவோருக்கு வழங்கப்பட்டுள்ள 260 ரூபா மிகுதிப் பணத்தை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (இ-ஜ-4)

## நாளை மூடப்பட்டிருக்கும்

அனைத்து அனுமதி வழங்கும் செயலகங்களும், குடும்ப அட்டைப்பகுதிச் செயலகங்களும், விசாரணைப் பகுதிச் செயலகம், மோட்டார் ஊர்திப் பதிவுச் செயலகம், யாழ். வன்னி தொடர்புச் சேவைச் செயலகம் என்பன நாளை திறக்கப்படமாட்டா என்பதனைப் பொதுமக்களின் கவனத்துக்கு போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவினர் அறியத்தருகின்றனர். (ஐ)

## வீரச்சாவு...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பித்தது.

இந்தியாவிற்கும் எமக்குமிடையே போர் ஆரம்பித்த 1987.10.10 அன்று நேரடி மோதலில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் முதல் பெண் மாவீரரான 2 ஆம் லெப். மாலதியின் ஏழாம் ஆண்டு நாள், நாளை நினைவு கூரப்படவுள்ளது.

தமிழீழப் பெண்களின் எழுச்சிக்கே மூலகாரணமாக அமைந்த இந்த மாவீராங்கனையின் உருவப்படங்களை வீடுகள் தோறும் பந்தலிட்டு விளக்கேற்றி மலர் தூவி வணக்கம் செய்வோம். வீதிகள் தோறும் எழுச்சிக்கொடி கட்டி, தமிழீழப் பெண்ணினத்தின் வீரத்தை உலகுக்குப் பறைசாற்றுவோம்.

நாளை காலை 10.00 மணிக்கு இவரின் நினைவாக கோப்பாயில் அமைக்கப்பட்டுள்ள கல்லறையில் அனைவரும் கூடி விளக்கேற்றி, மலர் தூவி வணங்குவோம்.

இவரின் நினைவாக பிற்பகல் 3.00 மணிக்கு யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள வீரவணக்கக் கூட்டத்திலும் கலந்துகொண்டு இவரின் வரலாறை நாளைய சந்ததிக்குச் சொல்லி நிற்போம்.


இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

உ
விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

ஈழத்தின் தலை சிறந்த தேர்ச்சிற்பியும், முன்னைநாள் சித்திர பிரதிக் கல்விப் பணிப்பாளரும், சன்மார்க்க நுண்கலை மன்ற நிறுவகப் பணிப்பாளரும், முன்னைநாள் சன்மார்க்க சபைத் தலைவரும் இந்திய புனித பூமியில் விஸ்வபதம் அடைந்தவருமாகிய

இராஜஸ்தபதி, சிற்பக் கலாதிலகம், கலாபூஷணம், இரதச் சக்கரவர்த்தி, கலாகேசரி



## விஸ்வப்பிரம்ம ஸ்ரீ ஆ. தம்பித்துரை

அவர்களுக்கு

எமது 31 ஆம் நாள் நினைவு அஞ்சலியை செலுத்துகிறோம்

மலர்வு: **05 - 05 - 1932**

உதிர்வு: **09 - 09 - 1994**

திதி:

ஆண்டு பவ ஆவணி ஆறுநாள் கானவெள்ளி
பூண்டநாள் சித்திரை - பூர்வபக்கம் - தூண்டுபுகழ்
தாங்கும் சதுர்த்தியாம் தம்பித் துரைபரமன்
பூங்கழலைச் சேர்ந்த பொழுது

இந்தியப் புனிதபூமியில் இறைபதம் எய்திய
எமது சிற்பக்கலை ஆசானின் ஆத்மா
சாந்தியடைய எல்லாம் வல்ல
விஸ்வப் பிரம்மத்தைப் பிரார்த்தித்து நிற்கும்

மாணவர்கள்
விஸ்வப் பிரம்மஸ்ரீ த. ஸ்ரீதரனும், கலைஞர்களும்

''சிந்துஜா கலையகம்'',
மயிட்டி வடக்கு, காங்கேசன் துறை.

(33260)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org